விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 21 சனிக்கிழமை (07.11.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 323

பொதுசன நூலகம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்.




# ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவை முழுமையாகச் சீரமைக்கத் தீர்மானம்

## அலரி மாளிகை தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவின்அரசியல் பிரவேசத்துடன் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவை முழுமையாக மறுசீரமைக்க ஜனாதிபதி தீர்மானித்திருப்பதாகவும் அலரி மாளிகைத் தரப்புத் தகவல்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கிளி. மாவட்டத்தில் நேற்று ஆயிரம் பேர் மீள்குடியமர்வு!

(வவுனியா)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்விற்காக நேற்று ஆயிரம் பேர் அங்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அரச அதிபர் திருமதி எமில்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்குக் கரையோரப் பிரதேசங்களான நாச்சிக்குடா, முழங்காவில், ஜெயபுரம் தெற்கு, ஜெயபுரம் வடக்கு ஆகிய பகுதிகளில் இவர்கள் மீளக்குடியமர்த்தப்படுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

இடைத்தங்கல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டு அவர் (14 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்துறையிலிருந்து கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலிருந்து நாளையும், எதிர்வரும் 13,18,23 மற்றும் 28 ஆகிய திகதிகளில் பிரயாணிகள் கப்பல் வாயிலாக பயணிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி தினங்களில் பயணத்தை மேற்கொள்பவர்கள் அன்று காலை 7.00 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் (14 ஆம் பக்கம் பார்க்க)

## 78 மேலதிக வாக்குகளால் அவசர காலச் சட்டம் நீடிப்பு

(கொழும்பு)

அவசர காலச் சட்டம் நாடாளுமன்றில் 78 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேறியது. இச் சட்டத்திற்கு ஆதரவாக 95 வாக்குகளும் எதிராக 17 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஆளும் தரப்பினருடன் இணைந்து ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாகவும்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த (14 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா–நாராயணன் வாஷிங்டனில் சந்திப்பு

(கொழும்பு)

கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரி ஜெனரல் சரத் பொன்சேகா வாஷிங்டனில் தங்கியிருந்தபோது இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனைச் சந்தித்துள்ளதாகத் தூதரகத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சரத் பொன்சேகா உத்தியோகபூர்வமாக அமெரிக்க இரா (14 ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

பருப்பு, சீனி மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் ஆகியவற்றின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளன.

230 ரூபாய்க்கும் 240 ரூபாய்க்கும் இடையில் விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு கிலோ மைசூர் பருப்பின் விலை 180 ரூபாய் வரை குறைக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன (14 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோ. ஒன்றியத்தின் அறிக்கை அரசியல் நோக்கம் கொண்டது

### அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டம் வழங்குவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் வெளியிட்ட அறிக்கை அரசியல் ரீதியான நோக்கங்களைக் கொண்டுள்ளதாக அரசாங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டத்தை வழங்குவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் நேற்று பதில்களை அனுப்பி வைத்துள்ளது.

மனித உரிமை விசாரணைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றிய அறிக்கை தொடர்பிலான இலங்கையின் க்ண்ணோட்டம் என்ற தலைப்பில் இலங்கை பதில் அறிக்கை ஒன்றை ஒப்படைத்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம (14 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புச் செயலாளர் குறித்து அறிவதே அமெரிக்காவின் நோக்கம்

### ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் குறித்து அறிவது அமெரிக்காவின் நோக்கம் என முப்படைகளின் பிரதான அதிகாரி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது;

அமெரிக்க அரசாங்கம் தனிப்பட்ட விசாரணை நடத்த முயற்சித்த போதும் இலங்கை அரசாங்கத்திடம் (14 ஆம் பக்கம் பார்க்க)

## நாடு திரும்பிய சரத் பொன்சேகா ஜனாதிபதியைச் சந்திக்கவில்லை

### முறுகல் நிலையே காரணம் எனத் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவில் யுத்த மீறல் தொடர்பான விசாரணைக்கு முகம் கொடுக்காது நாடு திரும்பிய கூட்டுப் படைத் தலைமை அதிகாரி ஜெனரல் சரத் பொன்சேகா, இதுவரையில் முப்படைத் தளபதியான ஜனாதிபதியையோ அல்லது பாதுகாப்புச் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷவையோ சந்திக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரத் பொன் (14 ஆம் பக்கம் பார்க்க)

இவற்றின் சிறப்பம்சங்கள்

ASP ENTERPRISES

யாழ் மண்ணில் புதியதோர் உதயம்

# பெற்றோல் செலவில்லை
# குறைந்த எடை & நீண்ட பாவனை
# இலகுவாக மிதித்துச் செல்லலாம்
# இலகு தொழில்நுட்பத்துடன் அமைந்தது
# எட்டு மணித்தியாலங்கள் தொடர்ந்து மின்னேற்றினால் 60~70Km வரை பயணம் செய்யலாம்
# பற்றரிக்கு ஒரு வருட உத்தரவாதம்
# ஒரு Km க்கான செலவு 0.15 சதம் மாத்திரமே

மின்சார சக்தியில் இயங்கும் புதிய

Electric Bicycles

விற்பனையாகின்றன.





மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்

கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி
360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி - 0213001585, 0776079352

(C-3662)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மக்களை மீள்குடியேற்றுவதில் அர்ப்பணிப்பு

# பசில் எம்.பிக்கும், அமைச்சர் பதியுதீனுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி. பாராட்டு!

(கொழும்பு)

இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர்த்துவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ எம்.பியையும் மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாட் பதியுதீனையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் பாராட்டுவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பி. என்.ஸ்ரீகாந்தா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

இடைக்கால கணக்கறிக்கை பிரேரணை மீதான மூன்றாவது நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இடம் பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியேற்றுவதில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ எம்.பியும் மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாட் பதியுதீனும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றார்கள்.

அவர்களது பணியைப் பாராட்டாது இருக்க முடியாது. அரசாங்கம் மேற்கொள்ளுகின்ற மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு திருப்தியடைந்துள்ளது.

மீளக்குடியேற்றப்படும் மக்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படுகின்றது. மீளக்குடியேறும் போது உடனடி தேவையின் நிமித்தம் 5ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகின்றது. என்றாலும் தற்போது வழங்கப்படுகின்ற 25 ஆயிரம் ரூபாவையை 50ஆயிரம் ரூபாயாக அதிகரித்து வழங்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பேரழிவுக்கு உள்ளாகியுள்ளன. வீடுகள், வீதிகள், பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. ஆஸ்பத்திரிகளில் வைத்தியர்கள் மற்றும் தாதியர் பற்றாக்குறை நிலவுகிறது. இக் குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கு புனரமைப்பு பணிகளுக்கு கட்சி சார்பின்றி ஒத்துழைப்பு நல்க நாம் தயாராகவுள்ளோம். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக கட்சி வேறுபாடுகளை மறந்து சகலரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

சிங்கள மக்களிடமிருந்து எந்தத் தீர்வையும் பறித்தெடுக்க தமிழ்மக்கள் விரும்பவில்லை. அதேநேரம் தமிழ் மக்கள் மீது எந்தத் தீர்வையும் திணிக்கவும் முடியாது.

எமக்கு அரசியல் அணிகள் குறித்து அக்கறை கிடையாது. நாம் எந்தத் கூட்டணியிலும் சிக்கிக்கொள்ளமாட்டோம்.

ஆட்சியைக் கைப்பற்றும் ஆசை எமக்குக் கிடையாது. அதிகாரப் போட்டி இந்நாட்டின் தேசியப் பிரச்சினையை இழுத்தடிக்கக் கூடாது. எமது கடமைகளைச் செய்யத் தயாராகவுள்ளோம்..

எம்மால் இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும். எல்லாக் கட்சிகளும் ஓரணியில் நின்றால் இந்நாட்டு மக்களுக்கு நல்லதொரு எதிர்காலம் கிடைக்கும் எனத் தெரிவித்தார். (ச-5)

## நாட்பாடசாலை வகுப்பு நாளை

இலங்கைத்திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டமேற்கல்வி நிகழ்ச்சித் திட்ட 2009,2010 ஆம் கல்வியாண்டு மாணவர்களுக்கான நாட்பாடசாலை வகுப்பு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக்கு யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச-4)

## சங்காபிஷேகம்

வேலணை வங்களாவடி மண்சுமந்தான் பதி அருள் மிகு ஸ்ரீ நரசிங்க வைரவப் பெருமான் திருக்கோயில் கும்பாபிஷேக திருமணவாளக்கோல சங்காபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் வைரவப் பெருமானுக்கு விசேட (108) அஷ்டோத்திர சத சங்காபிஷேகமும் நண்பகல் விசேட பூசையும் நடைபெற்று பிற்பகல் ஒரு மணிக்கு அன்ன தானம் இடம்பெறும். (ச-5)

## கால்நடைகளை அகற்றல்

மறவன்புலோ கமக்கார அமைப்பின் எல்லைக்குட்பட்ட கால்நடைகளை முட்கம்பி வேலிக்கு அப்பால் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் எதிர்வரும் புதன்கிழமை ஆலடி என்ற இடத்தில் காலை 8.00 மணிக்கு வரும்படி மறவன்புலோ கமக்கார அமைப் பின் தலைவர் சி.திருஞான சம்ப ந்தர் அறிவித்துள்ளார். (ச-37)

# பிரான்ஸ் ம.உ. ஆணையாளர் இலங்கைக்கு திடீர் விஜயம்

(கொழும்பு)

பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் பேர்னாட் குச்னர் தமது மனித உரிமைகள் ஆணையாளர் பிரான்கொய்ஸ்ஸி மெரெயை இலங்கைக்கு அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களின் துரித மீள்குடியேற்றத்துக்கு பிரான்ஸினால் வழங்கப்பட வேண்டிய உதவிகள் மற்றும் ஏதுநிலைகள் தொடர்பிலும் ஆராயும் பொருட்டே அவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

ஆசியாவின் மிகப்பழைய யுத்தம் நிறைவடைந்து ஆறு மாத காலங்கள் நிறைவடைந்த பின்னரும் இலங்கை மக்கள் அதன் தாக்கங்களை இன்னும் அனுபவித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பருவமழை ஆரம்பித்துள்ள நிலையில் இடம் பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான இலங்கை அதிகாரிகளின் நடவடிக்கையை எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இடம்பெயர்ந்த மக்கள் பாரிய அளவில் அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பதாகவும் அவர்களுக்கு போதிய சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

முகாம்களுக்குள் மனிதாபிமான நிலைமைகள் மிகவும் கஷ்டமானதாகவே இருப்பதாக தெரிவித்த அவர், இதன் காரணமாகவே மனித உரிமைகள் தூதுவரை அனுப்பியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 5ஆம் திகதி இலங்கை வந்த அவர் இன்றுவரை தங்கியிருந்து அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான நிலைவரங்கள் தொடர்பான தகவல் களை திரட்டுவார் என அவர் தெரிவித் துள்ளார். (ச-5)



கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவைச் சார்ந்த உரும்பிராய் கிழக்கு, கரந்தன் மினியடி கிராமத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 25 குடும்பங்களிற்கு அரைநிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளன. இதன் முதற்கட்டமாக 1.8 மில்லியன் நிதிச் செலவில் 15 அரைநிரந்தர வீடுகள் அமைப்பதற்கான வேலைத்திட்டத்தை உரும்பிராய் புனித மைக்கல் ஆலய பங்குத்தந்தை அருட்பணி யூட் நிக்சன் கடந்த சனிக்கிழமை அடிக்கல் நாட்டி தொடங்கிவைத்தார்.

# யாழ். மக்களின் வசதிக்கேற்ப யாழ்தேவி புகையிரத சேவையின் நேரத்தை மாற்றக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 வீதியூடாக கொழும்பு செல்லும் பயணிகளின் நன்மை கருதி யாழ்தேவி புகையிரத சேவையின் நேர அட்டவணையில் மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வாசுதேவ நாணயக்காரவிடம் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு 4 நாள் விஜயமாக நேற்று வருகை தந்த ஜனாதிபதி சிரேஷ்ட ஆலோசகர் வாசுதேவ நாணயக்கார நேற்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னரா ஜாவை அவரது இல்லத்தில் சந்தித்தார். இச்சந்திப்பின் போதே மேல் நீதிமன்ற நீதிபதி மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் பயணிகள் பஸ்கள் வவுனியாவைச் சென்றடையும் நேரத்தில் யாழ்தேவி புகையிரத சேவையை ஆரம்பித்தால், யாழிலிருந்து புறப்படுவோர் உடனடியாகவே கொழும்பை நோக்கி பயணிக்க முடியும். இதனால் அவர்கள் எதிர்நோக்கும் சிரமங்களை தவிர்க்க முடியும்.

அத்துடன் யாழ். சிறைச்சாலை கட்டடத் தொகுதியை விரைவில் நிர்மாணிப்பதுடன் நீதிபரிபாலணங்களின் செயற்பாடுகளையும் வலுப்படுத்த வேண்டுமெனவும் யாழ். மேல் நீதி மன்ற நீதிபதி இ.த.விக்கினராஜா வாசுதேவ நாணயக்கார விடம் வேண்டுகோள் விடுத்தார். இதேவேளை இச்சந்திப்பில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், உயர் பாதுகாப்பு வலயம் பகுதியில் மீள் குடியேற்றப் பணிகள் மற்றும் பொதுவான விடயங்கள் குறித்து ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# இலங்கை விமானப்படையின் அருங்காட்சியகம் திறந்துவைப்பு

இலங்கை விமானப்படையின் அருங் காட்சியகம் ரத்மலானையில் திறந்து வைக்கப்பட்டது. 1993 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட இக் காட்சியகம் இலங்கை விமான வரலாற்றினை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

விமானப்படைத் தளபதி ரொஸான் குணதிலக கூறுகையில் புதிதாக ஆரம்பிக் கப்பட்டுள்ள இக்காட்சியகத்தில் புகைப்படங்கள், சிறிய திரையரங்குகள் 1951ஆம் ஆண்டு காலமுதல் யுத்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் எனப்பல்வேறுபட்ட பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை விடுதலைப் புலி களின் 143 ஆயுதங்கள் மற்றும் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் என்பனவும் காட்சிப்படுத்தப்பட்டுள் ளன.

தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ள இக் காட்சியகம் மக்களது பார்வைக்காக காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை ஞாயிறு, திங்கள், பொது விடுமுறை, போயா தினங்களிலும் திறந்து விடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# சட்டவிரோத குடியேற்றவாசிகளின் பேச்சாளராக ஆட்கடத்தும் நபர்!

(ஜகர்த்தா)

இந்தோனேஷியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த 255 சட்டவிரோத குடியேற்றவாசிகளின் பேச்சாளர் அலெக்ஸ் என்பவர் சட்டவிரோதமாக ஆட் கடத்தும் முகவர் என வெளிவிவகார அமைச்சகம் அறிவித்துள்ளது.

இந்தோனேஷிய அரசாங்கம் மேற்கொண்ட விசாரணைகளில்இருந்து இவ்விடயம் உறுதிப்படுத்தப்பட்டுஜகார்த்தாலுள்ளஇலங்கைதூதரகத்திற்கு அறிவிக் கப்பட்டுள்ளது.

1982ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் திகதி பிறந்த அலெக்ஸ் எனப்படும் குலேந்திரராஜா சஞ்ஜீவ், கானான் குழுவைச் சேர்ந்தவர் என்றும், குழப்பம் விளைவித் தமை காரணமாக கடந்த 2003 ஆம் ஆண்டு கனடா விலிருந்து நாடு கடத்தப் பட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# பகிரங்க சேவைகள் ஓய்வூதியர்களுக்கு விசேட மரணக்கொடை கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களுக்கும் மேலும் ஒரு சிறந்தநலத் திட்டமாக விசேட மரணக்கொடை கொடுப்பனவுத் திட்டம் அமைகிறது.

எனவே சகல அங்கத்தவர்களும் தத்தமது பிரதேச செயலக பிரிவு நிதியச் செயற்குழுவினருடன் தொடர்பு கொண்டு இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விண்ணப்பப் படிவத்திற்கும் ஏனைய விவரங்களிற்கும் தங்கள் பிரதேசச் செயலக பிரிவில் உள்ள பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கைநிதியச்செயற்குழுவினருடன் தொடர்பு கொள்ளும்படி யாழ்.மாவட்ட பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தெரிவிக்கின்றார். (ச)

மணமகள் தேவை

யாழ்ப்பாணம் சைவ சமயத்தைச் சேர்ந்தவரும் 29 வயது, Msc முடித்து Mechanical Engineer ஆகவும், Canadian PR, ஏழுச் செவ்வாய், பூச நட்சத்திரம் மொத்த பாவம் 30 உடையவருக்கு, வைத்தியத் துறையில் படித்த, அல்லது படித்துக் கொண்டிருக்கும் மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: 071 3163508 (3888)

சாவகச்சேரியில்

நெற் போன்

ஐரோப்பிய நாடுகளுக்கு 3/=

இந்தியா 5/=

அரசடி கொமினிக்கேசன்
பெரியரசடி, சாவகச்சேரி.
Fax :- 021 226 3888
Phone :- 021 226 3888

(C-3664)

# ஜனாதிபதி மீண்டும் பதவியேற்றால் சர்வாதிகார நிலைமை ஏற்படும்

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ராஜபக்ஷ கூட்டத்தை விரட்டியடிப்பதற்கு பொதுவான அபேட்சகர் ஒருவரின் தேவை அவசியமானதென ஜே.வி.பி.யின் நாடாளு மன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த் தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாக பதவியேற்றுக்கொண்டால் சர்வாதிகார நிலைமை ஏற்படுமெனவும் இதனால் இதனை தடுக்க அனைவரும் பாடுபட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட் டுள்ளார். கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந் திப் பொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷ கூட்டம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் அவர்களை விரட்டியடிக்க வேண்டு மென அவர் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்புப் போன்றே பொதுவான ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரின் தேவையும் மிகவும் இன்றியமையாததென அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடிய சாத்தியமிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். தமிழ் மக்கள் உண்மை யில் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப் படவில்லை எனவும் நலன்புரி நிலையங்க ளுக்கு முள்வேலிகளும், துப்பாக்கிகளும் தேவையில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். (ஓ-6)

# இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்ற உலக நாடுகளின் பங்களிப்பு அவசியம்

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இடம்பெயர் மக்களை மீள்குடியேற்று வதற்கு உலக நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை தங்களது சொந்த இடங்களுக்கு மீள்குடியேற்றும் செயற் பாடுகளுக்கு உலக நாடுகள் பங்களிப்பு வழங் கவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர் மக்களை மீள்குடியேற்று வதற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கை களை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்காக சர்வதேச நாடுகளின் பங்களிப்பு மிகவும் அவசியமானதென வெளிவிவகார அமைச் சர் ரோஹித போகொல்லாகம குறிப்பிட்டுள் ளார்.

2 இலட்சத்து 88 ஆயிரம் இடம்பெயர் மக்களில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேரை அரசாங்கம் வெற்றிகரமாக மீள்குடியேற்றியு ள்ளதெனவும் எஞ்சியுள்ள மக்களை மீண்குடி யேற்றும் நடவடிக்கைகளை அரசாங்கம் அர்ப் பணிப்புடன் மேற்கொண்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ-6)

# விடுதலைப்புலிகளுக்கு சீனா, உக்ரைன் ஆயுதம் வழங்கியது

## கருணா தகவல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளிடமிருந்த பெரும்பா லான ஆயுதங்களை சீனா, உக்ரைன் ஆகிய நாடுகளே வழங்கியதாக தேசிய நல்லிணக்க அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரி வித்துள்ளார்.

அவர் ஜப்பான் செய்தி நிறுவனமொன் றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் தெரி வித்ததாவது,

விடுதலைப்புலிகள் சீனா, உக்ரைன் மற் றும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் இருந்து ஆயுதங்களை கொள்முதல் செய்தனர். பெரும்பாலான ஆயுதங்கள் உக்ரைன் நாட்டில் இருந்துதான் வந்தன.

வடகொரியாவிடமும் ஆயுதம் வாங்க முயற்சி நடந்தது.

இதுதொடர்பாக பல தடவை பேச்சுவார்த் தை நடந்தது. ஆனால் அங்கி ருந்து ஆயுதம் வழங்கப்படவில்லை. விடுதலைப்புலிகளிடம் இருந்த பெரும்பாலான ஆயுதங்கள் சீன, ரஷ்ய தயாரிப் புகளாகும்.

கம்போடியா, தாய்லாந்து, மலேசியா, லாவோஸ் ஆகிய நாடுகளிலும் விடுதலைப் புலிகள் தளம் இருந்தது. இவற்றை பத்ம நாபன் இயக்கி வந்தார் இவ்வாறு அவர் கூறி னார். (ஓ-6)

# சரத்பொன்சேகாவின் பிரதிநிதிக்கும் மனோகணேசனுக்கும் இடையில் சந்திப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவின் பிரதிநிதிக்கும், ஜன நாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்கும் இடையில் விசேட சந்திப் பொன்று நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஜெனரல் சரத்பொன்சேகா தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணியின் நிலைப் பாடு என்ன என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது, மனோ கணேசன் இதனைத் தெரிவித்துள் ளார்.

தமிழர் பிரச்சினைகள் தொடர்பில் குறித்த பிரதிநிதிக்கு விளக்கமளித்ததாக மனோகணே சன் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக நான்கு விடயங்கள் தொடர்பில் இந்த சந்திப்பின்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்படவேண்டு மென தெரிவித்துள்ள அவர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லா தொழித்தல் உள்ளிட்ட முக்கிய காரணிகள் தொடர்பில் எதிர்க்கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் கூறி னார்.

எவ்வாறெனினும், சரத் பொன்சேகாவின் பிரதிநிதி யார் என்பது பற்றியோ அல்லது பேச்சு வார்த் தையின் முக்கிய நோக்கம் பற்றியோ தகவல்கள் வெளியிடப்படவில்லை. (ஓ-6)


நீங்களும் அரச/சர்வதேச அங்கீகாரமுள்ள மருந்தாளர் (Pharmacist) ஆகலாம்!!

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது ஆரம்பமாகின்றது!!!

**Higher National Diploma in Pharmacy (HND in Pharmacy)**




வெகுவிரைவில் இக் கற்கைநெறி ஆரம்பமாகவுள்ளதால் உடன் எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**முக்கிய குறிப்பு :-**

எமது நிறுவனத்திற்கு அருகில் கந்தர்மடச்சந்தியில் உள்ள பாலம் திருத்துதல் வேலை நடைபெறுவதால் எமது நிறு வனத்திற்கு கீழ்வரும் வீதி வழியாக் நீங்கள் வரமுடியும். யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலைக்கு அருகில் உள்ள வீதி வழியாகவோ அல்லது பழம் வீதி வழியாகவோ வந்து பலாலி வீதிக்கு வந்து எமது நிறுவனத் திற்கு வரமுடியும்.

HND in Pharmacy examination conducted by Sri Lanka Medical Council SLMC registration Admission criteria to sit for the external examination is GCE A/L simple pass for the Chemistry. (Durations :- 18 Months )

Guaranteed admission to BSc. in Pharmacy programme in Universities with credit/year exemptions. In time to come we are planning to affiliate the existing programme with world renowned universities abroad leading to B.Sc , MSc, PhD Level.

**WHAT DO YOU LEARN? LEARNING COMPONENT**
Basic Pharmaceutical English Forensic
Pharmacy Pharmaceutics
Human Anatomy & Physiology
Pharmacology Pharmacognosy
Pharmaceutical Management Pharmaceutical Ethics
Pharmaceutical Marketing Practicals and Internship

A/L பரீட்சையில் Chemistry சித்தியடைந்திருத்தல் வேண்டும்

இக் கற்கை நெறியானது Pharmacy வைத்திருப்போர் or Pharmacy ஒன்றை ஆரம்பிக்க இருப்போர் மற்றும் Pharmacist துறையில் தொழில் புரிவோருக்கு மிகவும் பயனுள்ள கற்கை நெறியாகும்.

(c/3659)

மேலதிக விபரங்களுக்கு :- UNI ICT CAMPUS
No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P :- 021 321 6433 / 0777 110 862


# குருநாகல் பிரதேசத்தில் AH1N1 வைரஸ் பாதிப்பு

## 14 பாடசாலைகள் மூடப்பட்டன

குருநாகலில் 14 நகரப் பாடசா லைகள் உடனடியாக மூடப்படுவ தாக வடமேல் மாகாணசபை சுகா தார அமைச்சர் அசோக்க வடிவ மங்காவ நேற்று தெரிவித்துள்ளார்.

மூன்று சிறுவர்கள் AH1N1 வைரஸ் பாதிப்புக் குள்ளானதை யடுத்தே இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

பாடசாலைகள் திரும்பவும் திறப் பது குறித்து ஆராய்ந்து பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தெரிவிக்கப் படுகின்றது. (ஓ-6)


**யாழ். மீன்பிடி வலை உருவாக்கம்**
**நெவாட் அமையம்,**
**647, கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**வெற்றிடம்: கணக்காளர், உதவிக் கணக்காளர் Accountant**

யாழ். குருநகர் 647, கடற்கரை வீதியில் அமையும் மீன் பிடிவலை உருவாக்கத்தில் கணக்காளராகப் பணிபுரிவதற்கு விண்ணப் பங்கள் கோரப்படுகிறது. பின்வரும் தகைமை உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

- வயதெல்லை : 23-45 வயதிற்கு இடைப்பட்டவர்கள்
- கல்வித்தகைமை:- உயர் தேசிய கணக்கியல் சான்று (Higher National Diploma in Accountancy -HNDA)
- கணக்கியல்/ முகாமைத்துவம் சார் வேறு தகைமைகள்
- குறைந்தது 5 வருட இத்துறையில் அனுபவம்
- கடற்றொழில் துறையின் நிறுவன அனுபவங்கள் (அனுகூலம்)

மேற்கூறப்பட்ட அனைத்தினதும் போட்டோப்பிரதிகள், தங்களது முறையான முகவரி / தொலைபேசி எண்களுடன் நவம்பர் 14 ஆம் திகதி கு கிடைக்குமாறு அனுப்பிவைக்கவும். முடிவுத் திகதியின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இயக்குநர்
கரித்தாஸ் -கியூடெக்
14, மத்தியூஸ் தெரு
தியோகு வீதி,
யாழ்ப்பாணம்.
மின் அஞ்சல்: hudec@sltnet.lk

(c/3661)

## புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் வருடாந்த பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக வித்தியாலய அதிபர் தி.சத்தியபாலன், உபதலைவராக உப அதிபர் திருமதி கௌ.பரந்தாமன், செயலாளராக தபாலதிபர் பொ.தயாபரன், உபசெயலாளராக றோ, சிவபுத்திரன், பொருளாளராக திருமதி அ.சிவசிஸ்ரீ ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் செயற்குழு உப்பினரர்களாக சைவச்சிறுவர் இல்ல செயலாளர் கே. வி. குணசேகரம், சைவச்சிறுவர் இல்ல பொருளாளர் சோ.பத்மநாதன், சைவச் சிறுவர் இல்ல உறுப்பினர்களான டாக்டர் வி.வேதநாதன் க.கெ. துரைரட்ணம், வி.ஸ்ரீசக்திவேல், ஆர். தவஞானறஞ்சன், எஸ்.மகேசபாலன் திருமதி ம. சண்முகதாஸ் திருமதி ச.ஜெகதீஸ்வரி, இ.ஜெயகரன் ந.நரேந்திரா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர், (ஓ-4)

## மாணவர் அடையாள இலக்கம் வழங்குவது தொடர்பான செயலமர்வு

(அல்வாய்)

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் மாணவர் அடையாள இலக்கம் ஒன்றினை வழங்குவது தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் 4.30 மணிவரை வவுனியா தெற்கு கணனி வள நிலையத்தில் கல்வி அமைச்சின் பிரதிநிதிகளால் நடத்தப்படவுள்ளது.

மேற்படி செயலமர்விற்கு யாழ் மாவட்டத்திலுள்ள 5 வலயங்களைச் சேர்ந்த திட்டமிடல் பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் கோட்டக் கல்வி அதிகாரிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா அறிவித்துள்ளார். (ஓ-4-19)




## மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி தெரிவு இன்று

(யாழ்ப்பாணம்)

கண்டியில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள தேசிய மட்ட கூடைப்பந்தாட்ட போட்டிக்கான யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட வீர வீராங்கனைகளைத் தெரிவு செய்வதற்கான பயிற்சிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சியில் அனைத்து வீர வீராங்கனைகளையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் கேட்டுக்கொள்கின்றது. (ஓ)

# மக்கள் வங்கியின் வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிராமங்கள் தோறும் வங்கிச் சேவைகளை விரிவுபடுத்தும் வகையில் மக்கள் வங்கியின் வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் இன்று சனிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளன.

இதில் முற்பகல் 8 மணிக்கு புலோலியிலும், முற்பகல் 9.30 மணிக்கு கோப்பாயிலும்,10.30 மணிக்கு கல்வியங்காட்டிலும், 11.30 மணிக்கு நாவலர்வீதியிலும் சேவை நிலையங்களையும், பிற்பகல் 1 மணிக்கு இல.312, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள புதிய அமைவிடத்தில் காங்கேசன் துறைக் கிளையினையும் தன்னியக்கப் பணப் பரிமாற்ற இயந்திரத்தினையும் பண்டத்தரிப்பில் சேவை நிலையத்தினையும் பிற்பகல் 2 மணிக்கு மக்கள் வங்கியின் தலைவர் கருணாஜீவ திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் பொது முகாமையாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான பி.வி.பதிரண மற்றும் மக்கள் வங்கியின் தலைமை அலுவலக சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்விற்கு அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வடவலய உதவிப் பொது முகாமையாளர், யாழ். பிராந்திய பிரதேச பொதுமுகாமையாளர் மற்றும் பணிப்பாளர்கள் ஆகியோர் கேட்டுக்கொள்கின்றனர். (ஓ-4)

# நலன்புரி நிலையங்களில் இருந்து யாழ் வந்து க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றுவோருக்கு

(அல்வாய்)

யாழ். மாவட்டத்திற்கு நலன்புரி முகாம்களில் இருந்து வந்துள்ள க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் ஏற்கனவே நலன்புரி முகாம்களில் விண்ணப்பித்திருந்தாலும் மீண்டும் யாழ். மாவட்டத்திலுள்ள ஒரு பாடசாலையில் இணைந்து அப்பாடசாலையூடாக விண்ணப்பிக்க வேண்டும் எனவும் தனியாக ஆங்கில அல்லது கணிதம் மற்றும் ஏதாவது ஒரு பாடத்திற்கேனும் பரீட்சைக்கு தோற்றுவோரும் பாடசாலையில் இணைந்து விண்ணப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் விண்ணப்பப்படிவங்களை அவ்வவ் பாடசாலை அதிபர்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு முன்னர் தத்தம் வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் எனவும் இவ் விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு பரீட்சைத் திணைக்களத்தில் நேரடியாக கையளிக்கப்படவுள்ளதாகவும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (ஓ-4-19)

## நலன்புரி நிலைய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு

(சாவகச்சேரி)

நலன்புரி நில்லய முன்பள்ளிகளில் கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் தங்களது புரட்டாதி மாதக் கொடுப்பனவை நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் இவர்களுக்கான நிதி சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினரால் வழங்கப்படுவதாகவும் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார். (6-4)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான .செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் முன்பள்ளி ஆசிரியர்களிற்கான செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் கோப்பாய் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச-14)

## அன்பொளி கல்வியகத்தின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அன்பொளி கல்வியகத்தில் கல்வி கற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி வீதியில் அமைந்துள்ள அன்பொளி கல்வியகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விவசாய பீட விவசாய உயிரியல் துறை தலைவர் கலாநிதி குணசிங்கம மிகுந்தன் கலந்து சிறப்பிப் பதுடன் மாணவர்களுக்குரிய பரிசில்களை விவசாய இயந்திரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி துஷியந்திமிகுந்தன் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ஓ-4)

## பரிசளிப்பு விழா

(அல்வாய்)

யாழ். திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலய வருடாந்த பரிச்ளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் ஸ்ரீ.சிவராசா தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும் யாழ்ப்பாண நியாப் திட்டப் பணிப்பாளருமான வே.விசுவலிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் மாணவர்களுக்குரிய பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். அத்துடன் சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா.ரகுநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-4-19)

## பரிசுத் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் பரிசுத்தினம் இன்று சனிக்கிழமை காலை10 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ)

## முகாமைத்துவ கற்கை தெரிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக 2010/2011 ஆம் கல்வி ஆண்டுக்கான முகாமைத்துவ கற்கைநெறிக்கு யாழ்.பிராந்திய நிலையத்தில் விண்ணப்பித்தவர்களுக்கான தெரிவுப் பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

வேறு பரீட்சை நிலையங்களிலிருந்து அனுமதி அட்டைகள் கிடைத்தவர்களும் யாழ். பிராந்திய நிலையத்திற்கு பரீட்சை எழுத அனுமதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## உள்ளூராட்சி சபைகளுக்கு உழவு இயந்திரம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மாகாண அமைச்சினால் வடக்கின் வசந்தம் செயற்றிட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் உள்ள மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு ஒவ்வொரு உழவு இயந்திரமும் அதற்கான பெட்டிகளும் கையளிக்கப்படவுள்ளன.

இதற்கான நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உள்ளூராட்சி மாகாண அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-7)

## வலயமட்ட

## சைவநெறிப் போட்டிக்கான பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சைவநெறிப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலம்புரிப் பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சிவஞானம் வெற்றிவேலாயுதம் கலந்து கொள்ளவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-7)


## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

த.அஜந்தகுமாரின் "ஒரு சோம்பேறியின் கடல்" (கவிதைத் தொகுதி, "தனித்துத் தெரியும் திசை" (ஆய்வுநூல்) ஆகிய இருநூல்களின் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய கல்யாண மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்துறை விரிவுரையாளர் இ.இராமேஸ் கண்ணன் அறிமுகவுரை நிகழ்த்தவுள்ளதுடன், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வெளியீட்டுரை நிகழ்த்தவுள்ளார். நூலின் முதற் பிரதியை ஊற்று நிறுவனப் பணிப்பாளர் பொ.விக்னேஸ்வரன்,யாழ்.மாவட்ட தொழிற் கல்வி அமைச்சு மற்றும் வாழ்க்கைக் கல்வி இணைப்பாளர் அகிலன் ஆகியோர் பெறவுள்ளனர்.

தொடர்ந்து ஆய்வுநூல் பற்றிய கருத்துரையை கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ச.கலாமணி, மூத்த எழுத்தாளர் ஐ.சண்முகநாதன் ஆகியோரும் கவிதைத் தொகுதி பற்றிய கருத்துரையை தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அ.அருந்தாகரன், சமூகவியற்துறை உதவி விரிவுரையாளர் ந.மயூரரூபன் ஆகியோரும் ஆற்றவுள்ளனர். (ஓ-9)



தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்திற்கு அண்மையில் வலயப் பிராந்திய தலைவர்கள் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இதனைமுன்னிட்டு தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழத்தினர் ஊனமுற்ற பிள்ளை ஒருவருக்கு சக்கரநாற்காலி அன்பளிப்புச் செய்வதைப் படத்தில் காணலாம்.

# ராகு கேது பெயர்ச்சி பலன்கள்

## 27.10.2009 முதல் 08.06.2011 வரை



### மீனம்

(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

கெட்டிக்காரர்களாக இருந்தாலும் அவர் களை தட்டிக் கேட்கும் குணம் பெற்ற மீன ராசி நேயர்களே!

உங்கள் ராசிநாதன் குரு என்பதால் குருவருள் உங்களுக்கு இயற்கையிலேயே இணைந்திருக்கும். எனவே மலைபோல் வந்த துயர்கூட பனிபோல விலகிவிடும். எதிரியைப் பேசவைத்து எடை போடுவதில் வல்லவர்கள் நீங்கள். எடுத்த காரியத்தை எப்பாடுபட்டாவது முடித்துவிடுவீர்கள். உற்சாகத்தோடு பணிபுரியும் நீங்கள் ஒய்வு என்ற சொல்லே ஒதுக்கப்பட்ட வேண்டுமென்று விரும்புவீர்கள்.

உறுதியான மனமே உங்கள் மூலதனமாக இருப்பதால் இறுதியாக நீங்கள் எடுக்கும் முடிவை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். நீதி, நியாயத்திற்காக போராடுவீர்கள். உதவி செய்தவர்களை ஒருபோதும் மறக்காமல் நன்றி காட்டும் குணம் உங்களுக்கு உண்டு. அதனால்தான் தலைமைப் பதவி கூட உங்களுக்கு தானாகவே வந்து சேருகிறது.

பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு உங்களுக்கு எப்பொழுதும் உண்டு. ராசியில் கடைசி ராசியாக இருந்தாலும், வளர்ச்சியில் முதல் ராசியாகக் காட்சியளிப்பீர்கள். இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த குணங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த ராகு – கேது பெயர்ச்சி எப்படிப்பட்ட மாற்றங்களை எல்லாம் வழங்கப் போகிறது. என்பதைப் பற்றி பார்ப்போம்.

**தொழிலை வளப்படுத்தும் பத்தாமிடத்து ராகு! தொகையைச் செலவிட வைக்கும் நான்காமிடத்து கேது!**

இதுவரை மகர ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும், கடக ராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான்வெளி பயணத்தில் 27.10.2009 அன்று பின்னோக்கி வந்து உங்கள் பிரச்சினைகள் தீர வழிவகுக்கப் போகிறார்கள்.

பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் பலவிதங்களிலும் நன்மைகள் வந்து சேரப் போகின்றன. இனி கவலை என்ற மூன்றெழுத்து உங்கள் அகராதியில் இருந்து அகன்று விடும்.

தொல்லை கொடுத்தவர்கள் எல்லோரும் இனி தோள் கொடுத்து உதவுவர். நல்லவர்களின் தொடர்பால் நலம் காண்பீர் கள். சனிப்பெயர்ச்சியால் ஏற்பட்ட சஞ்சலங் களை இந்த ராகுப் பெயர்ச்சி ஓரளவு மாற்றி அமைக்கும்.

இருப்பினும், சுக ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் ஆரோக்கியத்தில் மட்டும் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடல்நிலைத் தொல்லைகள் உருவாகலாம். ரண சிகிச்சைகளும் ஏற்படும். வாகனங் களில் செல்லும் பொழுது கூடுதல் விழிப் புணர்ச்சி காட்டுவது நல்லது. பழைய வாகனங்களுக்கு திருத்தச் செலவுகள் கூடும்.

பொதுவாக மின் சாதனங்களை கையாளும் பொழுது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. மருத்துவச் செலவுகளால் மன அமைதி குறையலாம். பொதுவாகவே சர்ப்ப கிரகங்கள் சுக ஸ்தானத்தில் சஞ்சரித்தால் விஷ ஐந்துக்களால் சிறு சிறு பாதிப்புகள் உருவாகலாம்.

எனவே, உங்கள் சுய ஜாதகத்தில் ராகு – கேதுக்கள் இருக்கும் நிலையறிந்தும், அதைப் பார்க்கும் கிரகத்தின் பலமறிந்தும், யோக பலம்பெற்ற நாளில் சர்ப்ப சாந்திகளை முறை யாகச் செய்து கொண்டால் சந்தோஷத்தை நாளும் சந்திக்காலம்.

ராகுவின் பலத்தால், தொழில் முன்னேற்றம் ஏற்படும் என்றாலும், மனதில் இனம்புரியாத கவலை மேலோங்கும். எந்த நேரமும் ஏதாவது ஒரு சிந்தனையில் ஆழ்ந்திருப்பீர்கள்.

புதிய நண்பர்களை தொழில் பங்குதாரர்களாக ஆக்கிக் கொள்ள முன்வருவீர்கள். அங்ஙனம் சேர்த்துக் கொள்ளும் பொழுது அவர்கள் ஜாதகங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து பங்குதாரர்களாக்கிக் கொள்வது நல்லது.

என்ன இருந்தாலும், நான்காமிடத்துக் கேது தாய் வழி உறவில் பகைகளை உருவாக்கலாம். அன்பு என்ற மூன்றெழுத்தை அனைவர் உள்ளத்திலும் பதியுங்கள். சண்டை என்ற மூன்றெழுத்து தானாக விலகிவிடும். வீடு, இடம், நிலம் வாங்குவதில் ஆர்வம் காட்டினால் விரயங்களில் இருந்து தப்பிக்கலாம். பயணங்களில் அலைச்சல் கூடுமே தவிர ஆதாயம் குறையும்.

நீண்ட தூர பயணங்களை மேற்கொள்ள விரும்புவோர் யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது. குடும்பத்தில் திடீர், திடீரென மனக் கசப்பு தரும் சம்பவங்கள் ஏற்படலாம். பெற்றோர்களின் உடல் நலத்தில் கவனம் தேவை. திடீர் தாக்குதல்களைக் கொடுத்து திக்கு முக்காடச் செய்யலாம். எந்த உணவை உங்கள் உடல் ஏற்றுக் கொள்கிறதோ அந்த உணவை மட்டும் சாப்பிடுவது நல்லது.

அப்பொழுது தான் ஒவ்வாமை என்ற நோய் உங்களை விட்டு அகலும். செம்பருத்தி மாலையிட்டு ஸ்ரீதேவி கருமாரியம் மனை வழிபட்டால் ஆரோக்கியத்திலும் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும்.

அக்டோபர் 27 என்பது உங்கள் மனதில் பதித்து வைத்துக் கொள்ள வேண்டிய மறக்க முடியாத நாள். அன்று தான் ராகு என்ற மாபெரும் கிரகம் உங்கள் ராசிக்கு பத்தாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் ராசிக்கு ஆறாமிடத்திற்கு அதிபதியான சூரியனின் சாரத்தில் முதலில் சஞ்சரிக்கிறார். எனவே தொழிலுக்காக கடன் வாங்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகும்.

அதே நேரத்தில் கேட்ட இடத்தில் கடன்கள் கிடைக்கும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைத்து புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

அரசியல் பிரமுகர்களில் இருந்து அனைத்து பிரபலங்களும் உங்கள் குரல் கேட்டதும் ஓடி வந்து உதவி செய்ய முன்வருவர். ஊர் மாற்றம், இடமாற்றம், தொழில்மாற்றம் போன்றவைகளைச் செய்ய நினைப்பவர்கள் அதை செயல்படுத்தும் நேரமிது. அதே நேரத்தில் கேது தன் பயணத்தை புனர்பூச நட்சத்திரக்காலில் குரு சாரத்தில் செலுத்துகிறார்.

குரு உங்கள் ராசி நாதனாகவும், செயல் ஸ்தானாதிபதியாகவும் விளங்குகிறார். எனவே, மலை போல் வந்த துயரை பனிபோல் விலகும் சூழ்நிலையை குரு உருவாக்குவார். குடும்பத்தில் ஒற்றுமை குறையாமல் இருக்க மனைவி, மக்களோடு விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

அப்பொழுது தான் சச்சரவில் இருந்து மீளமுடியும். வாங்கிய சொத்தை விற்க எடுத்த முயற்சி வெற்றி பெறும். விற்பனையான பிறகு அதில் வரும் தொகையிலிருந்து மீண்டும் ஒரு புதிய சொத்தை வாங்குவீர்கள். நான்காமிடத்து கேது நன்மையைத் தருமா? தீமையைத் தருமா? என்றெல்லாம் நீங்கள் சிந்திக்க வேண்டாம்.

கேதுவிற்குரிய தெய்வமாக விளங்கும் விநாயகப் பெருமான் வடக்கு நோக்கி வீற்றிருக்கும் ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தால் இடக்கு மடக்காகப் பேசியவர்களும் இனிமையாக பேசுவர். இல்லறமும் நல்லறமாக அமையும்.

30.09.2010 முதல் 08.06.2011 வரை மூலம் நட்சத்திரத்தில் கேது காலில் ராகு சஞ்சரிக்கிறார். அதே நேரத்தில் 2, 9க்கு அதிபதியான செவ்வாயின் காலில் கேது சஞ்சரிக்கிறார்.

இக்காலம் ஒரு இனிய காலமாகும். எடுத்த செயலை எளிதில் செய்து முடிக்க இயலும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். கொடி கட்டிப் பறந்த குடும்ப பிரச்சினைகள் மாறும்.

கூட்டாளிகள் உங்களுக்கு ஏற்ற விதத்தில் நடந்து கொள்வர். அலைச்சல் குறைந்து ஆதாயம் கூடும். வாகன யோகம் உண்டு. பணத்தேவைகள் பூர்த்தியாகும். நீண்ட நாள் ஆசை நிறைவேற வி.ஐ.பி.க்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

வீட்டு பராமரிப்பிற்காக ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். குழந்தைச் செல்வங்கள் மூலம் ஒரு குதூகலம் தரும் சம்பவம் நடைபெறும். இழந்தவைகளை எடுத்துக் கொடுக்கும் நேரமிது.

29.12.2009 முதல் 29.09. 2010 வரை பூராட நட்சத்திரத்தில் சுக்ரன் சாரத்தில் ராகு சஞ்சரிக்கிறார். 3,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது வருமானம் போதுமானதாக இருக்காது. பணப் பற்றாக்குறை வந்து சேரும். காலையில் கையில் பணம் புரளும், மாலையில் கடனாளியாக இருப்பீர்கள்.

வேலையும் நிரந்தரமில்லை, வீட்டிலும் நிம்மதி இல்லையே என்று சொல்வீர்கள். உறவினர்கள் எதிரியாகலாம். ஊர் மக்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உடன்பிறப்புக்களின் குணமறிந்தும் நடந்து கொள்வது நல்லது. உறவை பகையாக்கிக் கொள்ளாமல் இருந்தால் தான் இக்காலம் பொற்காலமாக மாறும்.

அதே சமயத்தில் புனர்பூச நட்சத்திரக்காலில் வியாழன் சாரத்தில் கேது சஞ்சரிக்கிறார். மே 2010 க்கு மேல் திருவாதிரை நட்சத்திரக் காலில் கேது சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வுகள் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். கேட்ட இடத்திற்கு மாறுதல் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும். வாயில் தேடிவந்து திரும்பிச் சென்ற வரன்கள் கூட மீண்டும் வந்து சேரலாம். கோவில், குளம் என்று சுற்றியதன் பலன் இப்பொழுது கிடைக்கப் போகிறது. தென்முகக் கடவுள் வழிபாடு சிறப்புகளைச் சேர்க்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் தொழில் வளம் பெருகவும், நான்காமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறவும் வியாழன் தோறும் தெட்சாணாமூர்த்தியையும், புதன்கிழமை தோறும் அனுமனையும் வழிபட்டு வாருங்கள்.

சுய ஜாதகத்தில் ராகு – கேதுக்களின் பலன் அறிந்து சர்ப்ப சாந்திகளைச் செய்து பொருளாதார வளர்ச்சியை கூட்டிக் கொள்ளுங்கள். (முற்றும்)

## ஜனாதிபதிக்கு கௌரவ டாக்டர் பட்டம்

## ரஷ்ய பல்கலைக்கழகம் வழங்கவுள்ளது

(கொழும்பு)

பயங்கரவாதத்தை இல்லாதொழித்தல் மற்றும் உலக சமாதானத்திற்காக வழங்கிய பங்களிப்பு ஆகியவற்றை பாராட்டும் வகையில் ரஷ்ய பல்கலைக்கழகமொன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கத் தீர்மானித்துள்ளது.

ரஷ்யாவின் தி பீபில்ஸ் பிரன்ட்சிப் பல்கலைக்கழகம் இந்தப் பட்டத்தை வழங்கத் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 2010 ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் பல்கலைக்கழகத்தின் 50 ஆண்டு பூர்த்தி நிகழ்வின் போது ஜனாதிபதிக்கு இந்த கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்படவுள்ளது.

பல்கலைக்கழகத்தின்இந்தத் தீர்மானம் தொடர்பில் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லெவ்ரோவ் ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இலங்கையில் பயங்கரவாதத்தை இல் லாதொழிப்பதற்காகவும் உலக சமாதானத்தை ஏபடுத்துவதற்காகவும் ஜனாதிபதி வழங்கிய பங்களிப்பினை பாராட்டியே இந்த விருதினை வழங்கத் தீர்மானித்ததாகவும் பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித் துள்ளது. (ஓ-6)

## விமல் வீரவன்ச தலைமையிலான

## ஜே.என்.பி. கட்சிக்குள் பிளவு; கட்சியின் பொறுப்பாளர்களிருவர் இராஜினாமா

(கொழும்பு)

விமல் வீரவன்ச தலைமையிலான ஜே.என்.பி. கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜே.வி.பி. சிரேஷ்ட உறுப்பினரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான நந்தன் குணதிலக்க ஜே.என்.பி. கட்சியில் தாம் வகித்த பொதுச் செயலாளர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

மேலும் இதுவரையில் ஜே.என்.பி. கட்சியில் அவர் வகித்து வந்த அரசியல் சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் அவர் விலகிக் கொண்டுள்ளார். விமல் வீரவன்சவின் மிக நெருங்கிய நண்பர்களில் ஒருவராகக் கருதப்படும் கமல் தேசப்பிரியவும் கட்சியிலிருந்து விலகிக் கொண்டுள்ளார்.

ஜே.என்.பி. கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை கமல் தேசப் பிரிய வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய அமைப்பாளர் மற்றும் அரசியல் சபை உறுப்பினர் ஆகிய பதவிகளை தாம் இராஜினாமா செய்வதாக கமல் தேசப் பிரிய உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

ஜே.என்.பி. கட்சியின் தலைவர் விமல் வீரவன்சவின் செயற்பாடுகளினால் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக தாம் பதவி விலகுவதாக இருவரும் தன்னிலை விளக்கம் அறித்துள்ளனர். (6)

# மொழிபெயர்ப்பு செய்யக்கூடிய அதிநவீன கண்ணாடி அறிமுகம்

வெளிநாட்டு மொழிகளை மொழிபெயர்ப்பு செய்து திரையில் எழுத்து வடிவில் காட்சிப் படுத்தக்கூடிய அதி நவீன கண்ணாடி ஒன்றை பிரபல நெக் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

உரையாடல்களை ரியல்டைம் மொழி பெயர்ப்பு தொழில்நுட்பத்தின் மூலம் கண்ணாடித் திரையில் எழுத்துருவில் கொண்டு வர முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2010 ஆம் ஆண்டு ஜப்பானில் இந்த வகை கண்ணாடிகள் சந்தையில் விற்பனை செய்யப்படும் எனக் குறிப்பிடப்படுகிறது.

பொதுவான மொழிகளில் போதிய தேர்ச்சியற்றவர்களுக்கு இந்த அதி நவீன தொழில் நுட்பம் பேருதவியாக அமையக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஹெட்போன் மற்றும் மைக் மூலம் உரையாடல்களை பதிவு செய்து உடனுக்குடன் மொழிமாற்றம் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் புதிய கருவியைக் கொண்டு ஒரே நேரத்தில் வசன வடிவில் கேட்கவும், எழுத்து வடிவில் பார்க்கவும் முடியும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

அதாவது மொழி மாற்றங்கள் தொடர்பிலான தகவல்கள் ஒலி, ஒளி வடிவில் வெளியிடப்படவுள்ளது. (ஓ-6)

# தமிழகத்தில் பலத்த மழை ; 10 பேர் பலியாகியுள்ளனர்

(சென்னை)

வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளதால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நள்ளிரவு முதல் விடிய விடிய மழை கொட்டியதால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

மழை குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் கூறுகையில்,

தமிழகம் இலங்கை இடையே உருவான காற்றழுத்த தாழ்வு நிலை மேலும் வலுவடைந்து தமிழகத்தை நோக்கி நகர்ந்துள்ளது. தற்போது குமரி கடற்கரைப் பகுதியில் காற்றழுத்த தாழ்வு நிலை மையம் கொண்டுள்ளது. இதன் காரணமாக கடலோர மாவட்டங்களில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் பெய்து வரும் மழைக்கு நேற்று முன் தினம் 10 பேர் பலியாகினர். இதில் விழுப்புரம் மாவட்டத்தில் மூன்று பேர் பலியாகியுள்ளனர்.

மதுரை, சென்னை, திருச்சி, விருதுநகர், கடலூர், திருவாரூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் மழைக்கு பலியாகியுள்ளனர் என்று தெரிவித்தார். (ஓ-6)

# அமைச்சரிடம் அகதிப்பெண் கொடுத்த கோரிக்கை மனு


(இராமேஸ்வரம்)

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் உள்ள முகாமிற்கு அமைச்சர் சு.ப.தங்கவேலன் சென்று ஆய்வு நடத்தினார். அவர் அங்கு வசித்து வரும் அகதிகளிடம் குறைகளை கேட்டறிந்தார்.

கொட்டும் மழையிலும் குடை பிடித்தவாறு சென்ற அமைச்சர் முகாம்களில் உள்ள வீடுகளுக்குள்ளும் சென்று பார்வையிட்டார். அப்போது பெண் அகதியான பிரேரீட்டா (33) அமைச்சரிடம் கண்ணீருடன் கோரிக்கை மனு ஒன்றை அளித்தார்.

அம்மனுவில் இலங்கை, திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த எனக்கு கடந்த 2 மாதங்களுக்கு முன்பு ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள் பிறந்தன. அதில் ஒரு ஆண் குழந்தை இறந்துவிட்டது. எனது கணவரும் தொழிலின்றி அவதிப்பட்டு வருகிறார்.

2 பிள்ளைகளை வைத்து கொண்டு கஷ்டப்பட்டு வருகிறேன். எனவே குழந்தைகளை காப்பாற்ற கூடுதல் மானியம் வழங்க வேண்டும் என்று கூறியிருந்தார். (ஓ-6)




# பிரம்மபுத்திராவின் குறுக்கே சீனா தடுப்பணை

## மத்திய நீர்வளத்துறை அமைச்சர் தகவல்

(புதுடில்லி)

பிரம்மபுத்திரா நதியில் சீனா எந்த அணையும் கட்டவில்லை என கடந்த புதன்கிழமை வரை மறுத்து வந்த மத்திய அரசு, சீனா கட்டும் அணை, இந்திய எல்லையிலிருந்து 1,100 கி.மீ தொலைவில் அந்நாட்டின் எல்லைக்குள் இருக்கிறது என தெரிவித்துள்ளது.


இந்திய - சீன உறவுகளில் ஏற்பட்ட சிறு சிறு சலசலப்புகளால் பிரம்மபுத்திரா நதியில் 'ஜாங்மு' என்ற இடத்தில் சீன அரசு அணை கட்டும் விவகாரம் வெளிச்சத்துக்கு வந்தது.

அருணாச்சல பிரதேசத்தை தங்கள் பகுதி என கூறி வரும் சீனா இத்தகவலை மறுத்தது. அதற்கு ஆதரவாக மத்திய அரசும், சீனா அப்படியொரு அணை கட்டவேயில்லை என சத்தியம் செய்யாத குறையாகக் கூறியது.

தெற்காசியா - 2020 மாநாட்டில் கடந்த புதன்கிழமை பேசிய இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவும் கூட பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே சீனா எந்த அணையும் கட்டவில்லை என்றார். இந்நிலையில், நாடாளுமன்றம் மற்றும் ஊடகம் குறித்த கருத்தரங்கில் கலந்து கொண்ட மத்திய நீர்வளத் துறை அமைச்சர் பவன்குமார் பன்சால், சீனா அணை கட்டுவதை ஒப்புக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

சீனாவில் கட்டப்படுவதாகக் கூறப்படும் அணை, இந்திய எல்லையிலிருந்து 1,100 கி.மீ தொலைவில் அந்நாட்டுக்குள் அமைந்துள்ளது. அங்கு கட்டப்படுவது பெரிய அணையல்ல ; சிறு தடுப்பு அணை தான். அந்நாட்டில் பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே இதுபோன்ற 15 அணைகள் ஏற்கனவே உள்ளன.



அவற்றின் மூலமும், புதிய தடுப்பணையின் மூலமும் உள்ளூர் தண்ணீர் தேவைகளை அவர்கள் பூர்த்தி செய்வர். அவர்கள் நாட்டில் ஓடும் நதிக்கு நாம் உரிமை கொண்டாட முடியாது. இப்போது அந்நதியிலிருந்து நமக்கு 79 பி.சி.எம். (பில்லியன் கியூபிக் மீற்றர்) தண்ணீர் கிடைத்து வருகிறது. புதிதாக கட்டப்படும் தடுப்பணையால் நமக்கு வரும் தண்ணீர் அளவு குறைந்து விடக்கூடாது என்பது தான் நம் கவலை. நாம் தொடர்ந்து நிலைமையைக் கண்காணித்து வருகிறோம். இவ்வாறு பன்சால் தெரிவித்தார். (ஓ-6)

# இலங்கைக்கு எதிராக குரலெழுப்ப தயக்கம் ஏன்?

## பாரதீய ஜனதா கட்சி கேள்வி

இலங்கைக் கடற்படைத் தாக்குதல் நடத்துவதை தடுக்கவோ, கண்டனக் குரலெழுப்பவோ இந்திய அரசும் தமிழக அரசும் தயங்குவது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக பாரதீய ஜனதா கட்சியின் தமிழக துணைத் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்திய மீனவர்களை இந்திய கடல் எல்லையில் கூட மீன் பிடிக்க அனுமதிக்க மாட்டோம் என்று துணிச்சலுடன் இலங்கை கடற்படை தாக்குதல் நடத்துவதை தடுக்கவோ, கண்டனக் குரல் எழுப்பவோ இந்திய அரசும், தமிழக அரசும் தயங்குவதைப் பார்க்கும் போது இந்திய அரசுக்கும் மேலான அதிகார மையமாக இலங்கை திகழ்கிறதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

தொழில் நிறுவனங்களை பாதுகாக்க தனி படைப்பிரிவு அமைக்கப்பட்டிருப்பதைப் போல் இந்திய மீனவர்கள் மீன் பிடிக்கும் போது அவர்களுக்கோ அவர்களுடைய தொழிலுக்கோ பாதகம் ஏற்படாத வகையில் காக்கக்கூடிய கடல் தொழிற்படைப் பிரிவை இந்திய அரசு உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

இலங்கையில் வாடும் தமிழக மீனவர்களை மீட்க வேண்டும். அவர்களுக்கு தேவையான இழப்பீட்டை மத்திய அரசு வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஓ-6)

# தமிழர்கள் இலங்கை திரும்ப விரும்பினால் உரிய நடவழக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் எ.வ. வேலு தெரிவிப்பு

அகதிகள் முகாமில் இருக்கும் தமிழர்கள் இலங்கைக்குத் திரும்பச் செல்ல விரும்பினால் அங்கு செல்ல உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உணவுத்துறை அமைச்சர் எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர் முகாம்களில் அமைச்சர்கள் ஆய்வு மேற்கொண்டு ஆய்வறிக்கையை வரும் 10 ஆம் திகதி சமர்ப்பிக்க வேண்டும்என தமிழக முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊத்தங்கரை பாம்பாறு அணை, போச்சம்பள்ளி, கெலவரப்பள்ளி ஆகிய மூன்று இடங்களில் இலங்கைத் தமிழர் முகாம்கள் உள்ளன. இங்கு 346 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 174 பேர் வசிக்கின்றனர். இந்த முகாம்களில் தமிழக உணவுத்துறை அமைச்சர் வேலு ஆய்வு செய்து குறைகளைக் கேட்டறிந்தார்.

போச்சம்பள்ளி வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உள்ள முகாமை ஆய்வு செய்த அமைச்சர் வேலு இலங்கைக்கு திரும்பி போக விருப்பம் உள்ளவர்கள் எழுத்துப் பூர்வமாக எழுதி கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். இந்த முகாமில் உள்ளவர்கள் 14 பேர் இலங்கைக்கு திரும்பிச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் 50 பேர் இலங்கைக்கு திரும்பி செல்ல விருப்பம் தெரிவித்ததை அடுத்து இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் உறுதியளித்தார்.

முகாமில் தங்கியுள்ள கேத்ரினா என்ற பெண் சமீபத்தில் பிரசவம் ஆகி குழந்தை இறந்து விட்டதால் தன் மருத்துவ செலவுக்கு நிதி உதவி வழங்க வேண்டும் என்று அமைச்சரிடம் கேட்டார்.

இதைத் தொடர்ந்து கேத்ரினாவின் மருத்துவ செலவுக்கு 5 ஆயிரம் ரூபாவை அமைச்சர் வேலு வழங்கினார். (ஓ-6)

# எங்களை எங்கள் நாட்டுக்கே அனுப்ப வழி செய்யுங்கள்

## தோப்புக்கொல்லை முகாம் தமிழர்கள் கோரிக்கை

(சென்னை)

முதல் அமைச்சர் கருணாநிதியின் உத்தரவுக்கமைய புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளமுகாம்களின் நிலைகுறித்து தஞ்சாவூர் மாவட்ட அமைச்சர் உபையதுல்லா ஆய்வு செய்தார்.

அம்மாவட்டத்தில் தோப்புக் கொல்லையில் உள்ள இலங்கைத் தமிழர் இடைத்தங்கல் முகாமிற்கு சென்றதும் தமிழர்கள் தங்களது குறைகளைக் கூறினார்கள்.

எங்களுக்கு ஓட்டுநர் உரிமம் வேண்டும். கிராமப்புற 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் எங்களுக்கும் வேலை வழங்க வேண் டும். கலைஞர் காப்பீட்டு திட்டம் எங்களுக்கும் வேண்டும் என்பன உட்பட பல்வேறு கோரிக்கைகளை வைத்தனர்.

எங்களை எங்கள் நாட்டுக்கே அனுப்ப வழி செய்யுங்கள் அதற்கு முன்பு அங்கே அமைதியான சூழ்நிலையை நிலவச் செய்யுங்கள் என்றும் கோரிக்கை வைத்தனர். (ஓ-6)

# இன்று ஒரு தகவல்

## தொப்பி சாமி

இமயமலை அடிவாரத்தில் ஒரு மடம் இருந்தது. அங்கு ஒரு சந்நியாசி இருந்தார்.

அவரிடம் ஒருவர் வந்து ''சுவாமி... நான் ஆசையை உதற நினைக்கிறேன் முடியவில்லை ஒட்டிக் கொண்டே வருகிறது'' என்றார்.

அதைக் கேட்ட சந்நியாசி அவரை உட்காரச் சொல்லி விட்டு ஒரு கதையைக் கூறினார்.

ஓர் ஊரில் ஓர் ஆள் இருந்தான். அவன் பெயர் குப்பு சாமி. அவனிடம் எப்போதும் ஒரு பழைய தொப்பி இருக்கும். அதனால் அவனை எல்லோரும் "தொப்பி சாமி" என்று அழைத்தனர்.

அவனிடம் அவனது நண்பர்களெல்லாம் "நீ ஒரு தொப்பி வாங்கிக் கொள்ளக்கூடாதா?" என்று பல முறை சொல்லிப் பார்த்தார்கள்.

அதற்கு அவன் "புதுத் தொப்பி வாங்குவதற்கு பணத்திற்கு எங்கே போவது?" என்று கூறிவிட்டான்.

அவனிடம் பணம் இருந்தது. ஆனால் அதைச் செலவு செய்ய அவனுக்கு மனம் வரவில்லை. மகா கஞ்சன்.

அவன் பழைய போத்தல்கள் வாங்கி விற்பது வழக்கம். அப்படி அவன் ஒரு சமயம் பழைய கண்ணாடிச் சாமான்களை ஏலத்தில் எடுத்த போது அதில் ஓர் அருமையான "சென்ட்" போத்தல் கிடைத்தது.

உடனே அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அந்த "சென்டை" சிறிய போத்தல்களில் அடைத்து ஜன்னல் ஓரமாக அடுக்கி வைத்தான். அதை விற்றால் பணம் கிடைக்குமே என்று அவன் அப்படிச் செய்தான்.

இதற்கிடையில் ஒரு நாள் அவனது நண்பன் வந்து "நீ இந்தப் பழைய தொப்பியை மாற்றக்கூடாதா? உன்னை எல்லோரும் கேலியாகப் பேசுகிறார்கள்" என்றான்.

அதற்கு அவன் ''சென்ட் போத்தல் விற்றதும் பணம் வரும். அதன் பின் பார்க்கலாம்'' என்றான்.

ஒரு நாள் இவனும் நண்பனும் நீச்சல் குளத்துக்குப் போனார்கள். அதே சமயம் அந்த ஊர் நீதிபதியும் குளிப்பதற்காக அங்கு வந்தார். அவரிடம் ஒரு விலையுயர்ந்த தொப்பி இருந்தது. அதை அருகிலிருந்த ஸ்ராண்டில் மாட்டிவிட்டுக் குளிக்கச் சென்றார்.

இதற்கிடையில் குளித்து விட்டு வந்த குப்புசாமி தனது தொப்பியைக் காணாது நண்பனின் வேலை தான் என்று நினைத்து அதிலிருந்த புதுத் தொப்பியை மாட்டிக்கொண்டு வந்து விட்டான்.

நீதிபதி தன் தொப்பியைக்காணாது பொலிஸில் புகார் கொடுத்தார்.

உடனே பொலிஸ்காரர்கள் அங்கோர் மூலையில் கிடந்த குப்புசாமியின் தொப்பியை எடுத்துக்கொண்டு அவனது வீட்டுக்குச் சென்றார்.

அங்கு புதுத்தொப்பி இருந்தது. குப்புசாமிக்கு ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. எரிச்சலுடன் வீட்டுக்குச் வந்த குப்புசாமி அந்தப் பழைய தொப்பியை தூக்கிக் குளத்தில் எறிந்தான். அந்தத் தொப்பி ஒரு மீனவனின் கையில் சிக்கியது. அவன் அதையெடுத்து போகும் வழியில் வேகமாக வீசியெறிந்தான். அது குப்புசாமி வீட்டு ஜன்னல் வழியாக வந்த சென்ட் போத்தல்கள் மீது விழுந்தது. எல்லா சென்ட் போத்தல்களும் நொறுங்கி விட்டன.

குப்புசாமி பார்த்தான். தன் வீட்டுத் தோட்டத்தில் ஒரு குழி வெட்டி அதில் தொப்பியைப் புதைத்தான்.

இதைக் கண்ணுற்ற எதிர்வீட்டுக்காரன் குப்புசாமி ஏதோ புதையல் வைத்திருப்பதாக பொலிஸில் புகார் கொடுத்தான்.

பொலிஸ் வந்து குழியைத் தோண்டினால் அதில் பழைய தொப்பிதான் இருந்தது.

அன்றிரவே குப்புசாமி அந்தத் தொப்பியை ஒரு கல்லில் சேர்த்துக் கட்டி குடிநீர்த் தொட்டியில் போட்டு விட்டான்.

ஒருநாள் திடீரென குழாய் அடைப்பட்டுப் போனது. மாநகரசபையினர் வந்து பார்த்தால் குப்புசாமியின் தொப்பிதான் குழாயை அடைத்தமை தெரிய வந்தது.

இதற்காக குப்புசாமிக்கு 2500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடைசியாக அவன் தொப்பியைக் கொளுத்தி வெளியில் வீசினான். சிறிது நேரத்தில் தீயணைப்பு படை வந்தது. இவன் எடுத்தெறிந்தது வெளியில் விழுந்து வீட்டுக் கூரையே பற்றிக் கொண்டது. அத்தோடு அவனுடைய பணத்தாசையும் எரிந்து போயிற்று என்று அந்த சந்நியாசி கதையைக் கூறி முடித்தார்.

அந்தக் குப்புசாமியிடம் இருந்தது போன்ற பழைய தொப்பி நம் ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. அதை எப்படித் தொலைப்பது என்று தெரியாமல் நாம் தடுமாறிக் கொண்டிருக்கிறோம்.

அது என்ன தொப்பி என்று கேட்கிறீர்களா? அதுதான் நம்மைச் சூழ்ந்திருக்கும் மாயை. மெஞ்ஞானம் கிடைக்கும் போது மாயை எரிந்து போகும் என்று பெரியவர்கள் கூறுகிறார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்ப்பாண கல்வி வலய சதுரங்க போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டி முடிபுகள் வெளிவந்துள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**தனிநபர்**

**தரம் - 3 ஆண்கள்**

யூ. நிவேதன் (சென் பொஸ்கோ வித்தி, சி. சிவபுயன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), பா. எறிக் டி பீர்ஜன் (கோப்பாய் நாவலர் வித்தி.

**தரம் - 3 பெண்கள்**

வ. துசானி (கோப்பாய் நாவலர் வித்தி), வி. தீபிகா (சென் பொஸ்கோ வித்தி), பி. ஜறின் நிலோஜினி (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை).

**குழு**

**தரம் - 4 ஆண்கள்**

சென் பொஸ்கோ வித்தி, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, சென். ஜோன்ஸ் கல்லூரி.

**தரம் - 4 பெண்கள்**

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, சென். பொஸ்கோ, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.

**தரம் - 5 ஆண்கள்**

சென் பொஸ்கோ, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, சென். ஜோன்ஸ் கல்லூரி.

**தரம் - 5 பெண்கள்**

சென் பொஸ்கோ, யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

**13 வயதுக்கு கீழ் ஆண்கள்**

யாழ். இந்து கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, மத்திய கல்லூரி.

**13 வயதுக்கு கீழ் பெண்கள்**

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, யாழ். இந்து மகளிர் கல்லூரி, கோப்பாய் ம.வித்தி.

(ஓ-7)

# யாழ். கல்வி வலய மெய்வன்மைப் போட்டி 2009 ஆம் ஆண்டின் முதன்மை வீரர்கள்

(யாழ்ப்பாணம்)

**ஆண்கள்**

11 வயது

செ.இனோக்ராஜ் -புனித ஜோன் பொஸ்கோ வித்தி.

13 வயது

இ.சுபாகரன்- சென்ஜோன்ஸ் கல்லூரி.

15வயது

ச.சஜீவன்-யாழ்.மத்தியகல்லூரி

17 வயது

ர.வதுஷன்-யாழ்.மத்திய கல்லூரி

19 வயது

யூ.எரிக் பிரதாப் - சென்பற்றிக்ஸ் கல்லூரி

21 வயது

ச.வாகீசன் -யாழ். இந்துக்கல்லூரி.

**பெண்கள்**

11 வயது

ஜெ.பிரியதர்சினி-திருக்குடும்ப கன்னியர்மடம்.

13 வயது

சு. சுவஸ்கினி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

15 வயது

இ.தரசுதா - கொக்குவில் இந்துக் கல்லூரி

17 வயது

சி.மேரிபெனினா -திருக்குடும்பக் கன்னியர்மடம்

19 வயது

ச.பானுஜா-யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

21 வயது

கி.ஜசிந்தா -அத்தியார் இந்துக் கல்லூரி.

# இராசி பலன்

07.11.2009

(ஐப்பசி 21 சனிக்கிழமை)

பஞ்சமி மாலை 5.37 மணிவரை

திருவாதிரை பிற்பகல் 4.00 மணிவரை

இராகுகாலம் 9.05-10.35 மணிவரை

சுபநேரம் 3.05-4.35 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், போசன சுகம், தனலாபம், உறவினர் சந்திப்பு. |
| இடபம் | குடும்பக் கவலை, விவாதம், எடுத்த காரியம் தாமதமாகும், திடீர் நன்மை. |
| மிதுனம் | சயன சுகம், விருந்துபசாரம், நண்பர்கள் சந்திப்பு, ஜனவசியம். |
| கடகம் | பிதாசிந்தை, கோபப்படுதல், திடீர் பயணம், வேலைச்சுமை. |
| சிங்கம் | காரிய அனுகூலம், பெரியோர் உதவி, தனலாபம், போசன சுகம். |
| கன்னி | அதிகாரம், முயற்சி கைகூடும், புதிய தகவல், தன்னம்பிக்கை. |
| துலாம் | புதிய திட்டமிடல், ஆன்றோர் சந்திப்பு, அஜீரண கோளாறு, பயந்த சுபாவம். |
| விருச்சிகம் | வீண் பகை, ஆரோக்கியக்குறைவு, காரிய தாமதம், பிறருக்கு உதவுதல். |
| தனுசு | அபூர்வ சந்திப்பு, பணவருவாய், தொழில் நன்மை, விருந்துபசாரம். |
| மகரம் | சத்துரு ஜெயம், நிலை மாற்றம், சுகவாழ்வு, காரிய நன்மை. |
| கும்பம் | உறவினர் மனஸ்தாபம், தனவிரயம், வியாபார விருத்தி, சிறுவியாதி. |
| மீனம் | பயந்த சுபாவம், கௌரவக் குறைவு, புதிய விடயம், முயற்சி தாமதம். |

வளவன்

# அழகியற்கல்வி பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

3174 அழகியற் கல்வி பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்க்ப்படவுள்ளதாகவும் இது தொடர்பான அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சு அறிவிக்கிறது.

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் 3175 அழகியற் கல்வி ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன. இந்த வெற்றிடங்களை கூடிய விரைவில் நிரப்புவதற்காகவே கல்வி அமைச்சு இந்த நடவடிக்கையை மேற்கொள்கிறது.

சித்திரம், நடனம், சங்கீதம், நாடகம் போன்ற அழகியற் கல்வித் துறைக்கு மேற்படி 3174 பட்டதாரிகளும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதன்படி தேசியப் பாடசாலைகளுக்கான நியமனங்கள் கல்வி அமைச்சினூடாகவும், மாகாண பாடசாலைகளுக்கான நியமனங்கள் மாகாண கல்வி அமைச்சினூடாகவும் வழங்கப்படவுள்ளன.

இதன்படியே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் அழகியற் கல்வியில் பட்டம் பெற்ற பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு சேர்த்துக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ளது.


கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இதற்கான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.


இவ்வாறு புதிய ஆசிரியர் நியமனங்கள் நிரப்பப்படுவதற்கு முன்னதாக பாடசாலைகளில் நிலவும் மேலதிக ஆசிரியர்கள் தொடர்பாக விபரங்கள் பெறப்பட்டு நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களின் சமநிலை பேணவும் கல்வி அமைச்சு முடிபு செய்துள்ளது.

(ஓ-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 75 | 90 | 60 |
| தக்காளி | 70 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 35 | 40 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 60 | 60 | 80 |
| பூசணி | 15 | 30 | 30 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 75 | 90 | 70 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 120 |
| பாகற்காய் | 100 | 120 | 60 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 70 | 80 | 80 |
| லீக்ஸ் | 110 | 140 | 140 |
| பீற்றூட் | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 140 | 160 | 120 |
| கீரை - 1 பிடி | 25 | 30 | 20 |
| தேசிக்காய் | 200 | 240 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |





IDM கணனி நிறுவனத்தின் சுன்னாகம் கிளை மாணவர் ஒன்றிய ஏற்பாட்டில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் நிறுவன ஊழியர்கள் இரத்ததானம் செய்வதைப் படங்களில் காணலாம்.

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக

### ரூபாவதி கேதீஸ்வரன் நியமனம்

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றி வரும் ரூபாவதி கேதீஸ்வரன் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு இந்த நியமனத்தை வழங்கியுள்ளது.

ரூபாவதி கேதீஸ்வரன் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராகவும் மட்டக்களப்பு உதவி அரசாங்க அதிபராகவும் சுனாமி வேலைத் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் கடமையாற்றியதுடன் தற்போது மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றுகின்றார்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ள இவர் எதிர்வரும் திங்கட்கிழமை அதற்கான கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார். (ஓ-6)

## சம்பூர் பிரதேசத்தில் வெடிமருந்து மீட்பு

(கொழும்பு)

திருகோணமலை, சம்பூர் பிரதேசத்தில் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவான வெடிமருந்துகளை பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

இவ்வாறு அதிசக்தி வாய்ந்த 50 கிலோ எடையுள்ள சீ-4 ரக வெடி மருந்து மீட்கப்பட்டுள்ளது.

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே வெடிமருந்து மீட்டெடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்ட சந்தேக நபர் வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமாகிய நிமல் மெதிவக்க தெரிவித்துள்ளார். (ஓ-6)

### மீள்குடியேற்றம் முடியும்வரை

## இனப்பிரச்சினைக்கான தீர்வினை எதிர்பார்க்க முடியாது

### மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவுறும் வரை ஒரு எதிர்பார்ப்புமிக்க அரசியல் தீர்வினை மேற்கொள்ள அரசாங்கத்தால் முடியாதென மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

ஹிந்து நாளிதழுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த விடயம் எந்தநிலையிலும் வாதங்களுக்கு முன்னிலைப்படுத்தப்படும் விடயமாகி விட்டது. மீள்குடியேற்றங்கள் நிறைவடையும் வரை அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்ற கேள்வியே எழுந்து வருகிறது.

எனவே இந்த நிலையில் அரசாங்கத்தால் அரசியல் தீர்வு குறித்து யோசிக்கமுடியாத நெருக்கடியான நிலை காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இந்த ஆண்டுக்கு நிறைவடைவதற்கு முன்னர் 80 தொடக்கம் 90 சதவீதமான இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்ற முடியுமானதாக இருக்கும் என நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் உள்ளக இடப்பெயர்வுக்கு உள்ளானவர்கள் மட்டுமன்றி இந்தியாவில் அகதிகளாக உள்ள இலங்கையர்களும் வீடு திரும்ப ஆரம்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீள்குடியேற்ற நடவடிக்கைகளை ஒரே இரவில் மேற்கொள்ள முடியும் எனப் பலரும் நம்புகின்றனர். எனினும் நிலக் கண்ணிவெடிகள் அதற்கு பாரிய சவாலாக இருக்கின்றன.



மக்கள் அவசரமாக அங்கு குடியமர்த்தப்பட்டு விட்டால் நிலக் கண்ணிவெடிகளால் அவர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு அது ஒரு புதிய பாரிய பிரச்சினையை உண்டு செய்யும்.

அத்துடன் உட்கட்டுமான வசதிகளின்றி அவர்கள் மீள்குடியேற்றம் செய்யவும் முடியாத நிலை காணப்படுவதாக தெரிவித்த அவர், ஐக்கிய நாடுகளின் வரையறைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்றத்திற்கு குறைந்த பட்ச தரமாவது பேணப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை வடக்கின் மீள் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்காக வருடாந்தம் 1.5 பில்லியன் டொலர்களை செலவிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்கே பல முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ள நிலையில் வடபகுதி மக்களுக்கான இலகு கடன் கொடுப்பனவுகளுக்காக 2 பில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)


# அழைப்பிதழ்

## மக்கள் வங்கி

வடக்கின் வசந்தம்

அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிராமங்கள் தோறும் வங்கிச் சேவைகளை விரிவுபடுத்தும் வகையில் மக்கள் வங்கியினால் எதிர்வரும் 07.11.2009 அன்று பின்வரும் சேவை நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

| நேரம் | இடம் |
|---|---|
| மு.ப. 08.00 மணி | புலோலி சேவை நிலையம் |
| மு.ப. 09.30 மணி | கோப்பாய் சேவை நிலையம் |
| மு.ப. 10.30 மணி | கல்வியங்காடு சேவை நிலையம் |
| மு.ப. 11.30 மணி | நாவலர்வீதி சேவை நிலையம் |
| பி.ப. 01.00 மணி | இல.312, ஆஸ்பத்திரி வீதியிலமைந்துள்ள புதிய அமைவிடத்தில் காங்கேசன்துறைக் கிளையினைத் திறந்துவைத்தலும், தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திரம் திறந்து வைத்தலும், |
| பி.ப. 02.00 மணி | பண்டத்தரிப்பு சேவை நிலையம் |

மக்கள் வங்கித் தலைவர் கௌரவ கருணாஜீவ அவர்கள் இச்சேவை நிலையங்களைத் திறந்து வைக்கவுள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் மக்கள் வங்கி பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமாகிய திரு.பி.வி.பதிரண அவர்களும், தலைமை அலுவலக சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் தாங்களும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

*உதவிப் பொது முகாமையாளர் (வடவலயம்)*
*பிரதேச முகாமையாளர் (யாழ். பிராந்தியம்)*
*பணியாளர்கள்.*

(C-3660)


## இடம்பெயர் முகாம்களில் நிலைகொண்டுள்ள படையினரை விலக்கிக் கொள்ள முடியாது

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இடம்பெயர் முகாம்களில் நிலைகொண்டுள்ள இராணுவப் படையினரை விலக்கிக் கொள்ள முடியாது என அரசாங்கம் அமெரிக்காவிற்கு அறிவித்துள்ளது.

நலன்புரி நிலையங்களில் தற்போது காணப்படும் இராணுவக் கட்டுப்பாடு தளர்த்தப்பட வேண்டுமென அமெரிக்கா கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும், அமெரிக்க அரசாங்கத்தின் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என அரசாங்கம் திட்ட வட்டமாக அறிவித்துள்ளது.

இடம்பெயர் மக்கள் நாளாந்தம் முகாம்களிலிருந்து வெளியேறிச் செல்ல அனுமதி அளிக்கப்பட வேண்டுமென அமெரிக்க காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் அமுல்படுத்த முடியாதென அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த யோசனைத் திட்டத்தை முன்வைத்தவர் விடுதலைப்புலிகளின் செலவில் வன்னிக்கு விஜயம் செய்தவரென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர் மக்களை மீள்குடியேற்ற வேண்டுமென அமெரிக்க காங்கிரஸில் டெனி டேவிஸ் என்ற பாராளுமன்ற உறுப்பினர் யோசனைத் திட்டமொன்றை அண்மையில் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# விஜய நகரப் பேரரசு

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

46

பேராசிரியர்
**க.அ.நீலகண்டசாஸ்திரிகள்**

சாயனர் தலைமையில் அமைந்த அறிஞர் குழுவினர் எழுதிய வேத விளக்கவுரையும் தென்னிந்தியாவிலிருந்த முக்கியமான கோயில்களுள் ஏறக்குறைய எல்லாவற்றிலுமே விஜயநகரப் பேரரசர்கள் கட்டிய மனங்கவரும் புதிய கட்டடங்களும் அந்த இந்துப் பேரரசின் பெருமைக்குரிய நினைவுச் சின்னங்களுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகத் திகழ்கின்றன. போர்த்துக்கீசர்களும் ஏக சங்கப் பாதிரியார்களுக்கு தென்னிந்திய மக்களைக் கிறிஸ்தவமதத்திற்கு மாற்றுமுயன்றார்கள். அதனால் அவர்கள் விஜயநகர பேரரசர்கள் அவர்களுடைய மேலாதிக்கத்திலிருந்த சிற்றரசர்கள் ஆகியவர்களுடைய வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டார்கள். அவ்வரசர்களுடைய எதிர்ப்பின் விளைவாகக் கிறிஸ்தவ மதம் அதிகமாகப் பரவாமல் நின்றுவிட்டது.

இப்போது பேரரசின் ஆட்சியில் நடைமுறையிலிருந்த அரசியல், நிர்வாக, இராணுவ முறைகளைப் பற்றிச் சில செய்திகளைக் கூறிய பின்னர் இந்த அதிகாரத்தை முடித்துக்கொள்ளலாம். அரசுரிமை கொள்கையளவில் பரம்பரையாக வந்தது என்பது உண்மையே. ஆனால், பேரரசு கடுமையான பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டிய நிலையில் இருந்தது.

ஒருபக்கத்தில் முஸ்லிம் ராஜ்யங்களின் பகைமையாலும் இன்னொரு பக்கத்தில் சிற்றரசர்களுடைய முரண்பாட்டாலும் தோன்றிய இன்னல்களைச் சமாளிப்பதற்கு அது எந்த நேரத்திலும் ஆயத்த நிலையில் இருக்க வேண்டும்.

அதனால், அந்தப் பேரரசின் அரியணையில் அமர விரும்பியவர்கள் உண்மையிலேயே அரச தந்திரத்திறனும், போர்த்திறனும் மிகுதியாகப் பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்பது இன்றியமையாததாயிற்று. எனவே, திறமையற்ற அரசர்களைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டோ, சிறையில் அடைத்துவிட்டோ, அதிகார விருப்பமும் திறமையும் வாய்ந்த அமைச்சர்கள் தாங்களே அரியணையேறியதும், அடாவழி அரசுரிமைப் பறிப்பால் மும்முறை புதிய அரசு மரபுகள் ஆட்சியைக் கைப்பற்றியதும், அந்தச் சமயங்களில் பிரபுக்கள் இரு கட்சியாகப் பிரிந்து அரசுரிமைக்குப் போட்டியிட்டவர்களை ஆதரித்தும் நமக்கு வியப்பைத் தரவில்லை. ஆனால், விஜயநகரப் பேரரசில் உண்டான கட்சிப் பூசல்களால் விளைந்த வெறுப்பும் பகையுணர்ச்சியும் பாமினி ராஜ்யத்திலும் அதற்குப் பின்வந்த ஐந்து முஸ்லிம் ராஜ்யங்களிலும் உண்டான வெறுப்பையும் பகையுணர்ச்சியையும் போல அவ்வளவு கடுமையானவை அல்ல என்று பொதுவாகக் கூறலாம். ஒரு சிலரைத் தவிர ஏனைய தலைவர்களெல்லோரும் பேரரசில் அவ்வப்போது தோன்றிய உள்நாட்டு அரசியல் நிலை தங்களுக்குப் பிடிக்காமலிருந்தாலும், கலகத்தில் ஈடுபட்டு அந்நிலையை மாற்ற முயல்வதை விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் அதனை ஏற்றுக்கொள்வது நல்லது என்று கருதி அதன்படியே இயன்ற வரையில் நடந்தார்கள்.

அரசனுக்கு ஆலோசனை கூறுவதற்கென அமைச்சரவை ஒன்றிருந்தது. அரசனும் அந்த அவையை அடிக்கடி கலந்தாலோசித்தான். எனினும், அமைச்சரின் ஆலோசனையை அவன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயமில்லை.

தன்னுடைய விருப்பம் போலும் தனக்கு மிகவும் பிடித்த தனி மனிதர்களுடைய ஆலோசனையின் படியும் நடப்பதற்கு அவனுக்கு முழு உரிமை இருந்தது. ஆட்சியதிகாரம் அனைத்தையும் தன் கையிலேயே குவித்து வைத்திருக்கிற அமைச்சனும் அரசன் அவனை விரும்புகிற வரையில்தான் அமைச்சனாயிருக்கலாம். அரசன் நினைத்தால் அவனை எப்போது வேண்டுமானாலும் பதவியிலிருந்து நீக்கிவிடலாம்; அவனுக்கு எத்தகைய தண்டனையை வேண்டுமானாலும் தரலாம். தன்னுடைய மகனைச் சாளுவதிம்மன் கொலை செய்துவிட்டான் என்று கருதிய கிருஷ்ணதேவராயன் அவனுக்களித்த தண்டனையை நாம்அறிவோம்.

அரசன் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணந்து கொள்ளலாம் என்பது அந்தக் காலத்து வழக்கம். அன்றியும் அவன் தனக்கும் தன் மனைவிகளுக்கும் பணிவிடை செய்ய ஏராளமான பணிப் பெண்களையும் அரண்மனையில் வைத்திருந்தான். அவர்கள் எல்லாருக்கும் வசதி மிகுந்த தனித்தனி அறைகள் இருந்தன. அரசனுடைய அந்தப்புரத்தைத் தக்க முறையில் வைத்திருப்பதற்கு அரண்மனை வரவு செலவுத் திட்டத்தில் ஒரு கணிசமான பகுதி செலவாயிற்று.

அரசகுமாரர்கள் அவர்களுடைய திறமைக்கேற்ப நிர்வாகப் பதவிகளில் அமர்த்தப் பட்டார்கள். அரியணையேறுவதற்கு யாதேனும் ஒருவகையில் உரிமையுடைய அரசகுமாரர்களுடைய நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி அவர்களுக்குக் காவல்போடுவதும் உண்டு. கிருஷ்ணதேவராயனைப் போன்ற வலிமைமிக்க அரசர்கள் அவ்வாறுசெய்தார்கள்.

மைய அரசின் அலுவல்களைக் கவனிப்பதற்கு பல நிர்வாகத்துறைகளிருந்தன. அரண்மனைக்கருகிலேயே நல்ல அமைப்பாண்மையுடைய தலைமைச் செயலகமும் இருந்தது.தலைநகரில் இரண்டு கருவூலங்கள் இருந்தன.அவற்றில் ஒன்று சிறியது ; மற்றது பெரியது ; சிறிய கருவூலம் அன்றாட நடைமுறை வரவு செலவுகளைக் கவனித்துக் கொண்டது. பெரிய கருவூலத்தில் ஏராளமான செல்வங்கள் கையிருப்பாக வைக்கப்பட்டிருந்தன. அந்தச் செல்வங்களை மேலும் மேலும் பெருக்குவதற்கு ஒவ்வோர் அரசனும் விரும்பினான்.

"யாரும் காணமுடியாதவாறு அந்தக் கருவூலத்தைப் பூட்டி முத்திரை வைத்து விடுவார்கள்" என்னும் "மிகுந்த பணத் தட்டுப்பாடு ஏற்பட்டாலொழிய அதனை அரசன் திறக்கமாட்டான்" என்றும் பேயிஸ் எழுதி வைத்திருக்கிறார்.

அரசனுக்குச் சொந்தமான விளை நிலங்கள், மகாநவமி விழாவின்போது சிற்றரசர்களும் மாகாண ஆளுநர்களும் செலுத்திய திறை,பேரரசின் பல துறைமுகங்களிலும் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆன வாணிபப் பொருட்களின் மீது விதிக்கப்பட்ட துறைமுகவரி, சுங்கவரி ஆகியவை அரசனுடைய வருமானத்தின் முக்கிய ஆதாரங்களாயிருந்தன. வரியைப் பணமாகவும் கட்டலாம்; பண்டமாகவும் கட்டலாம்.

விளைநிலங்கள் சரியானபடி அளக்கப்பட்டன. நிலத்தின் பரப்புக்கும், அதனுடைய தரத்துக்கும், அதில் விளைந்த தானியத்துக் கும், அதனுடைய அளவுக்கும் ஏற்றவாறு வரி விதிக்கப்பட்டது.

நன்செய் நிலத்திற்கும் புன்செய் நிலத்திற்கும் வ்ரி விகிதங்கள் வேறுபட்டன. குடியானவர்கள் ஆறிலொரு கடமையை அரசனுக்குச் செலுத்தவேண்டுமென்பது தான் மரபெனினும் பல சமயங்களில் அவர்கள் அதைவிட அதிகமாகவே செலுத்தினார்கள். சில சமயங்களில் முழு விளைவில் பாதியை அவர்கள் வரியாகச் செலுத்தினார்கள். கோயில் களும் கற்றறிந்த பார்ப்பனர்களும் விதிக்கப் பட்ட அளவுப்படி நிலவரியில் தங்களுக்குரிய பாகத்தை எடுத்துக் கொள்ளலாம். (தொடரும்)

## சிவதொண்டன் நிலையத்தில் பண்ணிசை பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய ஆதரவுடன் சிவதொண்டன் நிலைய நூலக மேல்மாடி மண்டபத்தில் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் பிற்பகல் 5 மணி முதல் இலவ்ச தேவாரப், பண்ணிசைப் பயிற்சி வகுப்பை நடத்தி வருகின்றனர்.வட இலங்கை சங்கீத சபையினதும் அகில இலங்கைத் திருமுறை மன்றபாடவிதானத்திற்கு அமைவாகவும் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது.

பயிற்சியை தேவாரஇசைமணி, துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல்,கலாபூஷணம் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் வழங்கி வருவதாக அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவிக்கின்றார்.

இப்பயிற்சி வகுப்பில் சிறுவர்கள், பெரியவர்கள்,ஆண்,பெண் இருபாலாரும் பங்குபற்றி பயிற்சி பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## கோத்தபாயவிடம் அமெ.விசாரணை செய்தமையை வெளிப்படுத்தியமை குறித்து விமல் மீது ஜனா.சீற்றம்



(கொழும்பு) பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் அமெரிக்கா சென்றிருந்த சந்தர்ப்பத்தில் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட யுத்தம் சம்பந்தமாக அந்நாட்டு பாதுகாப்புத் தரப்பினரிடம் வாக்குமூலம் அளித்துள்ளமை குறித்த தகவலை நாட்டிற்கு வெளிப்படுத்திய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவசன்ச மீது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீற்றமடைந்துள்ளார்.

இந்தத் தகவலை வெளியிட்டமைக்காக அவரை ஜனாதிபதி கடுமையாக திட்டியிருப்பதாக அலரிமாளிகைத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்க அதிகாரிகளினால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விசாரிக்கப்பட்ட விடயம் நாட்டு மக்களுக்கு மறைக்கப்பட்டிருந்ததுடன், அமெரிக்க செல்லும் வரை கூட்டுப் படைத் தலைமை அதிகாரி சரத் பொன்சேகாவும் அதுகுறித்து அறிந்திருக்கவில்லை.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அண்மையில் அமெரிக்கா சென்றிருந்த போது அந் நாட்டு குடிவரவு அதிகாரிகள் அவரிடம் சுமார் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக விசாரணை நடத்தினர் என கடந்த 2ஆம் திகதி வீரவசன்ச நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போது தகவல் வெளியிட்டிருந்தார். கோத்தபாய ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் இலங்கையின் பிரதிநிதிகள் குழுவில் இடம்பெற்றிருந்ததுடன், இந்தச் சந்தர்ப்பத்தின்போது அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டமை குறித்து ஊடகங்களுக்கு தெரிவிக்கப்படவில்லை எனவும் வீரவன்ச குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறாயினும், வீரவன்சவினால் இந்தத் தகவல் வெளியிடப்பட்டதன் பின்னர் கருத்து வெளியிட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தான் தப்பிக்கொள்வதற்காக ஜெனரல் சரத் பொன்சேகாவைக் காட்டிக்கொடுத்துள்ளதாக தெரிவித்திருந்தார்.சரத் பொன்சேகாவை கைதுசெய்ய அமெரிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அவர் கூறியிருந்தார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் உரையாற்றிய லக்ஷ்மன் கிரியெல்ல, இதற்கு முன்னர் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்க சென்றிருந்தபோது, அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது எனவும் அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையிலேயே சரத் பொன்சேகாவும் விசாரணை நடத்த தீர்மானிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.



எனினும், இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், சரத் பொன் சேகாவை அறிவுறுத்தாத நிலையில் அவர் அமெரிக்காவில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டதாகவும் கூறியுள்ளார். (ஓ-6)

## பசிலும் கோத்தபாயவும் தமது அமெரிக்க குடியுரிமைகளை ரத்து செய்ய வேண்டும்

### ஜே.வி.பி.கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்புச்செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் தமது அமெரிக்க குடியுரிமைகளை ரத்துச் செய்ய வேண்டுமென ஜே.வி.பி.கோரிக்கை விடுத் துள்ளது.

யுத்தக்குற்றச்சாட்டுக்களை சுமத்தும் முனைப்புக்களில் அமெரிக்கா ஈடுபட்டு வருவதாக ஜே.வி.பி.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித் துள்ளார்.


அமெரிக்க உள்விவகாரத் திணைக்களத்தின் விசாரணைகளுக்கு சமுகமளிக்காததன் மூலம் ஜெனரல் சரத்பொன்சேகா இலங்கையின் சுயகௌரவரத்தைப் பாதுகாத்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஜெனரல் சரத்பொன்சேகா தனது கிறீன் கார்ட் குடியுரிமை அந்தஸ்தை மிகவும் கௌரவமான முறையில் வாபஸ் பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பெறுமதியற்ற அமெரிக்கா போன்ற நாடுகளில் இலங்கைப் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் ஜனாதிபதி ஆலோசகர் ஆகியோர் குடியுரிமை வகிப்பது பொருத்தமற்றதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-6)

# பீடை நாசினிகளின் தோற்றமும் வகைகளும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 9-XX



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

பீடை நாசினிகளின் ஆரம்பம் விரும்பியோ விரும்பாமலோ தேவை கருதியதாக பயிர்ச் செய்கையில் சேதத்தை ஏற்படுத்தும் பீடைகளைக் கட்டுப்படுத்துவதாக அமைந்துவிட்டது. கணக்கின்றிப் பெருகும் பீடைகளைக் கட்டுப்படுத்த வழியென்று இதைத்தவிர வேறெதுவும் சரிப்படவுமில்லை.

குறிப்பிட்ட அளவினதாக இருந்த போது பீடை நாசினிகளின் பிரயோகம் அதிகமாக தேவைப்படவில்லையாயினும் பல்கிப் பெருகி பாரிய சேதத்தை உண்டு பண்ணும் போது அவற்றினது பெருக்கத்தையும், சேதத்தினையும் விரைந்து கட்டுப்படுத்தியே ஆக வேண்டுமல்லவா. இதற்காகத் தானே பீடை நாசினிகள் வகை வகையாக உற்பத்தி செய்யப்பட்டன.

இங்கே வகைகள் எனக் குறிப்பிடப்படுவன பீடைகளின் வகைகளாகவும் பீடை நாசினிகளின் தன்மையாகவும் கருதலாம். பீடைகளின் வகைகள் என பூச்சிகள், சிற்றுண்ணிகள், விலாங்குப் புழுக்கள், பறவைகள், ஏனைய விலங்குகள் என எலிகள், அணில்கள் இவற்றையும் விட நோய்கள், விரும்பத்தகாத களைகள் என பயிர்களுக்கு சேதம் விளைவித்து இழப்பு ஏற்படுத்துவன அனைத்தையும் குறிப்பிடலாம்.

முதலில் பூச்சி பீடை நாசினிகளிலிருந்து தெரிந்து கொள்வோம்

### பூச்சி பீடை நாசினிகள்

இவற்றினது தலைமுறை விருத்திபற்றி முன்னைய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருந்தேன்.

### முதலாந் தலைமுறை
(First Generation)

இதில் உள்ளடக்கப்பட்ட பூச்சி நாசினியா டீ.டீ.ரி இனைக் குறிப்பிடலாம். இப்போதும் எறும்பு பிரச்சினைக்கு உடனடியாக பயன்படுத்தும் பூச்சி நாசினிகளுள் ஒன்றான டீ.டீ.ரி. (DDT) இருக்கின்றது.

ஆரம்ப காலங்களில் நுளம்பினைக் கட்டுப்படுத்தவும் போரின் போது காடுகளுள் பயணிக்கும் சிப்பாய்களுக்கு பூச்சிக் கடியினால் ஏற்படும் நோயைச் சமாளிக்க உலக



சர்வாதிகாரியாக இருந்த அடொல்ப் கிட்லரின் பணிப்புக்கேற்ப கண்டுபிடிக்கப்பட்டதாக வரலாறு பதிந்து வைத்திருக்கின்றது.

டீ.டீ.ரி ஆரம்பத்தில் நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்காக விசிறப்பட்டாலும் இப்போதும் தொடர்ந்து அதனை அதே நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதில் இருந்து அது போல எளிமையான அதே வீரியங் கொண்ட பூச்சி நாசினியை கண்டுபிடிக்க முடியவில்லை என்பது உண்மையே.

பவுடர் வகையைச் சேர்ந்த டீ.டீ.ரி பல நாடுகளிலும் நுளம்பு ஒழிப்புத் திட்டத்திற்காக மட்டுமே பாரிய அளவில் விசிறப்படுகின்றதன் மகிமையை பார்த்தீர்களா!

### நீரில் கரையாது; கொழுப்பில் கரையும்

ஆரம்ப கால பீடை நாசினிகள் பொதுவாக நீரில் கரையாது கொழுப்பில் கரையும் திறனுடையவையாகும். நீரில் கரையாது இருப்பதால் இவற்றை தற்செயலாக நாம் உள்ளெடுத்தாலும் வெளியகற்றுவதிலும் அதனது நச்சுத் தன்மையை அகற்றுவதில் பிரச்சினை உண்டு.

கொழுப்பில் இலகுவில் கரைவதால் உணவுடனேயோ அல்லது நீர் மூலமாகவோ உள்ளெடுக்கப்படும் பிரிந்தழியாத நஞ்சு எமது இனப்பெருக்க கலங்கள் உள்ள இடங்களில் சேமிக்கப்பட்டுள்ள கொழுப்புடலங்களில் சிறுக்கச் சிறுக்க சேமிக்கப்படும்.

ஆனால் தாவர பீடை நாசினிகளென பிந்திய காலங்களில் பாவனைக்குட்படுத்திய உள்ளிக்கரைசல், வேம்பினுடைய விதைச் சாறு, புகையிலைச்சாறு என்பனவற்றிலுள்ள பூச்சிகளை கட்டுப்படுத்தக்கூடிய நச்சுத்தன்மை இலகுவில் நீரில் கரையும் தன்மையுடையன என்பதால் இவற்றை இலகுவில் எமது உடலிலிருந்து அகற்றிவிட முடியும்.

முதலாவது சந்ததி பூச்சிநாசினியான ஓர்கனோ குளோரின்களுக்கு (Organochlorines) உதாரணமாக டீ.டீ.ரி. என்பதாகும். இரண்டாவது சந்ததி பூச்சி நாசினியை சைக்குளோடீன்கள் (Cyclodines) எனப்படுபவையாகும்.

இவற்றுக்கு உதாரணமாக அல்டின், என்றின் போன்ற நச்சு சக்தி கூடிய பூச்சி நாசினிகளைக் கூறலாம்.

இவற்றினது நச்சுத் தன்மை காரணமாக இலகுவில் சூரிய ஒளியினால் பிரிந்தழியக் கூடிய தன்மையாலும் இக்குடும்பப் பூச்சி நாசினியின் பாவனை அதிக காலத்துக்கு பயன் உள்ளதாக இருக்கவில்லை. இதனால் மூன்றாவது சந்ததி பூச்சி நாசினிகள் உருப்பெற்றன.

இதில் ஓர்கனோ பொசுபேற்றுக்கள் (Organophosphates) அங்கம் வகித்தன. இக்குடும்பத்தில் மலத்தியோன், மொனோகுறோட்டபொஸ் (Monocrotophos) என்டோ சல்பான், மற்றும் டைம்தோயேற்று என்பன அடங்குகின்றன.

நீண்ட காலமாக விவசாயிகளின் பாவனையிலிருந்த பூச்சி நாசினிகள் இவை என்று கூறினால் மிகையாகாது. மலத்தியோன் என்ற பவுடர் வகை பூச்சி நாசினி இன்றும் பயன்பாட்டில் இருப்பது சிறப்புக்குரியது.

டீ.டீ.ரி யைப் போல ஆனால் நுளம்பு, எறும்பு என பலவற்றை கட்டுப்படுத்தக்கூடிய இயல்பு மலத்தியோன் எனும் பூச்சி நாசினிக்கு உண்டு.

மாறாக மொனோகுறோட்டபொஸ் எனும் ஊடுபுகுந்து தாக்கும் பூச்சி நாசினி சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்தக் கூடியது. அத்துடன் சிற்றுண்ணிகளைக் கட்டுப்படுத்துவது இதனது சிறப்பம்சமாகும்.

மொனோகுரோட்பொஸ் இவ் இரு உயிரினங்களையும் கட்டுப்படுத்தும் சிறப்புடையதாகியதால் பூச்சி நாசினி + சிற்றுண்ணி நாசினியாக தொழிற்படும். இதற்காகவே தென்னையிலுள்ள சிற்றுண்ணியை கட்டுப்படுத்த மொனோகுறோட்டபொஸ் இனை வேரின் மூலமாக செலுத்த சிபார்சு செய்யப்பட்டது. (தொடரும்)

# சேதனப் பசளை உற்பத்தி

திருமதி லதா. ஜனகன்
விவசாயப் போதனாசிரியர்
தலைமைப்பீடம்

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தில் சேதனப் பசள்ள உற்பத்தி பாவனை அதிகரிப்பு திட்டம் -2009 இன் நிதியீட்டத்தின் கீழ் விவசாயத் திணைக்களம் (விரிவாக்கம்) 200 விவசாயிகளிற்கு சேதனப்பசளை தயாரித்தல் பற்றிய விரிவுரையுடன் கூடிய செய்முறைப்பயிற்சியை தற்போது வழங்கிக் கொண்டிருக்கிறது.

இப் பயிற்சிக்கு புங்குடுதீவு, வேலணை, நல்லூர், தொல்புரம்,தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், உடுவில், புத்தூர், உரும்பிராய், சாவகச்சேரி, கைதடி, கரவெட்டி, அம்பன், புலோலி ஆகிய 14 விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலிருந்து விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிற்கு (EM) கூட்டெரு தயாரித்தல், மண்புழு உரம் தயாரித்தல், மண்புழுத் திரவம் தயாரித்தல் தொடர்பான தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான செயன்முறையுடன் கூடிய பயிற்சிகள் திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் வழங்கப்பட்டு வருகின்றது. பயிற்சியில் பங்கு பற்றும் விவசாயிகளிற்கு கையேடுகளும் வழங்கப்படுகின்றது.

இவ்விவசாயிகளிற்கு சேதனப்பசளை தயாரித்தல் சம்பந்தமாக வழங்கப்பட்ட தொழில்நுட்பங்களில் (EM) கூட்டெரு தயாரிப்பானது யாழ்ப்பாண விவசாயிகள் மத்தியில் புதிய விடயமாக இன்று காணப்படுகின்றது.(EM) கூட்டெரு பற்றிய தொகுப்பு வருமாறு

### (EM) - வினைத்திறனான நுண்ணங்கிகள்

EM (Effective Microorganism) என்பது இயற்கையில் காணப்படும் நன்மை பயக்கும் நுண்ணுயிர்களின் கலவைப் பத்திரம் ஆகும். இது திரவக்கலவை வடிவில் தயாரிக்கப் படுகின்றது.

இவ் (EM) தொழில்நுட்பமானது யப்பான் நாட்டு பேராசிரியர் டாக்டர். ரேகூஹிகா இனால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனாலும் அந்தந்த நாடுகளில் காணப்படும்நன்மை பயக்கும் நுண்ணுயிர்கள் அடையாளம் காணப்பட்டு அந்தந்த நாடுகளிலேயே (EM)

(EM) முதன்மைத் திரவத்திலிருந்து தயாரிக்கப்பட்ட (EM) திரவக் கலவை.



முதன்மைத்திரவம் தயாரிக்கப்படுகின்றது. 1996-1997 காலப்பகுதிகளில் இத்தொழில் நுட்பம்இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. இலங்கையில் மொறட்டுவ என்னும் இடத்தில் (EM) முதன்மைத் திரவம் தயாரிக்கப்படுகின்றது.

### (EM) கூட்டெரு

கூட்டெரு தயாரிப்பில் தாவர விலங்குக் கழிவுகளை விரைவாக உக்க வைக்கும் செயற்பாட்டிற்கு வினைத்திறனான நுண்ணுயிர்களை (EM) பயன்படுத்தி பெறப்படும் விளைவு (EM) கூட்டெரு எனப்படும்.

(EM) கூட்டெரு தயாரிக்க இலை, குலை, சருகுகள், நன்கு உலர்ந்த மாட்டுச்சாணம், சர்க்கரை, (EM)முதன்மைத் திரவம், சாதாரண கிணற்று நீர், பூவாளி, கறுப்பு பொலித்தீன், சிறிய மரக்கூடு ஆகியவை போதுமானதாகும்.கிணற்று நீரானது குளோரின் அற்றதாக இருத்தல் வேண்டும். ஏனெனில் குளோரின் கொண்ட நீரானது நுண்ணுயிர்களின் செயற் பாட்டைப் பாதிக்கும்.

### (EM) கூட்டெரு தயாரிக்கும் முறை

100 கிலோ (EM) கூட்டெரு பெறுவதற்கு

1. (EM) திரவக் கலவை தயாரித்தல்

❁ 100 கிராம் சர்க்கரையை 75 மில்லி லீற்றர் நீரில் பாத்திரம் ஒன்றினுள் கரைத்தல் வேண்டும்.

❁ இதனுடன் (EM) முதன்மைத்திரவம் 100 மில்லி லீற்றர் (10 மேசைக்கரண்டி) ஐ சேர்த்தல் வேண்டும்.

❁ பிளாஸ்ரிக் வாளியினுள் 10 லீற்றர் சாதாரண கிணற்று நீரை எடுத்து அதனுள் சர்க்கரைக் கரைசல் (EM) முதன்மைத் திரவம் என்பவற்றைச் சேர்த்து கலக்க வேண்டும்.

❁ வாளியின் மூடியை வளியுட் புகாதவாறு இறுக்கி 2-18 மணித்தியாலயங்களிற்கு நிழலான இடத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

### (EM) கூட்டெருக்கலவை தயாரித்தல்

❁ சுற்றாடலில் கிடைக்கும் 100 கிலோ கிராம் இலை குலை மற்றும் சருகுகள் நன்கு உலர்ந்த 10 கி. கிராம் மாட்டுச்சாணம் என்பவற்றை நன்கு கலந்து கொள்ள வேண்டும்.

❁ பின் தயாரிக்கப்பட்ட (EM) திரவக் கலவையை பூவாளியின் உதவி கொண்டு மேற்கூறப்பட்ட சேதனக்கழிவுக் கலவையின் மேல் தெளித்து நன்கு சேர்க்கப்படுதல் வேண்டும்.

❁ அதே நேரத்தில் 6 அடி நீளம் 4 அடி அகலம் 10 அங்குல உயரம் கொண்ட மரத்தாலான கூடு ஒன்றை அமைத்தல் வேண்டும்.

❁ மரக்கூட்டினுள் அமைந்த தரையின் மேல் 1000 கேஜ் தடிப்புடைய கறுப்பு பொலித்தீனை (1 கிலோ) விரித்தல் வேண்டும்.

❁ (EM) திரவக்கலவை சேர்க்கப்பட்ட காபன் சேதனக் கழிவுகளை மரக்கூட்டினுள் விரிக்கப் பட்ட பொலித்தீன் மேல் கொட்டி 10 அங்குல உயரத்திற்கு நன்கு காலால் மிதித்து நிரப்புதல் வேண்டும்.

❁ பின் காற்றிடை வெளிகளற்ற வகையில் கறுப்பு பொலித்தீனால் நன்கு மூடி விடுதல் வேண்டும்.

❁ 18-24 மணித்தியாலயங்களிற்கு பொலித்தீனால் மூடப்பட்ட நிலையில் விடுதல் வேண்டும். (தொடரும்)

> கோபம்-பழிவாங்கும் உணர்ச்சி - இவற்றினை மணந்து கொண்டால் கொடுமைதான் பிள்ளையாய்ப் பிறக்கும்.
>
> - ரஷ்யா

வலம்புரி

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு 'நிம்மதிக்கான' விடுமுறை வழங்க வேண்டும்

வன்னி மாவட்ட அரச ஊழியர்களை உடனடியாகக் கடமைக்குத் திரும்புமாறு வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி அறிவித்துள்ளார். கடமைக்குத் திரும்பாதவர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்படுமெனவும் அவர் தனது அறிவித்தலில் சுட்டிக் காட்டியுள்ளார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு, முகாமில் அடைபட்டு இப்போது விடுவிக்கப்பட்டு இருப்பிடம் தேடுவதற்கு அலைந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில்,

அரச ஊழியர்களை உடனடியாக கடமைக்கு திரும்புமாறு வடக்கு மாகாண ஆளுநர் கேட்பது எவ்வளவு நீதியானதென்பதை தென் பகுதிச் சிங்கள மக்களே தீர்மானித்துக் கொள்ளட்டும்.

மிகப்பெரிய யுத்த கொடுமைக்குள் அகப்பட்டு உள்ள உறவுகளை உயிரற்ற சடலங்களாக அடக்கம் செய்யவும் முடியாமல், வீதியில், வீட்டில், பதுங்கு குழிக்குள் விட்டுவிட்டு ஓடியோடி தப்பி வந்தவர்களிடம் வேலைசெய்யும் மனநிலை இருக்குமா என்பதை ஆளுநர் அவர்கள் மனித நேயத்துடன் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வன்னியில் நடந்த யுத்தம் தென் பகுதியில் நடந்து, அதனால் சிங்கள மக்கள் பாதிக்கப்பட்டு பின்னர் முகாமில் அடைக்கப்பட்டு மீளும் நிலை இருந்திருக்குமாயின் இலங்கை அரசு அவர்களுக்கு எத்தகைய சலுகைகளை வழங்கியிருக்கும் என்பதை ஒரு கணம் கற்பனை செய்து பாருங்கள்.

அந்தக் கற்பனையில் சம்பளத்துடன் கூடிய நீண்டகால விடுமுறை, இலவச வீடமைப்பு, நிதியுதவி, உலர் உணவு என ஏகப்பட்ட நிவாரணக் கொடுப்பனவுகள் அறிவிக்கப்பட்டிருக்கும்.

ஆனால் நமக்கு அதுவெல்லாம் கிடையாது. உண்மையில் எங்களிலும் பற்று இருந்திருந்தால்,

வன்னி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் முகாமில் இருந்து விடுதலை பெற்ற பின்னர் அவர்கள் எங்கு தங்கியுள்ளனர், அவர்கள் தங்குவதற்கு உறைவிடம் உண்டா? உணவிற்கு, ஏனைய தேவைகளுக்கு என்ன செய்கிறார்கள். அவர்களின் உணவுத் தேவைக்கு உலர் உணவு வழங்கப்படுகிறதா? அவ்வாறு வழங்கப்பட்டால் அது போதுமானதா? மீளக் குடியமர்ந்த குடும்பங்களில் உள்ள மாணவர்கள் பள்ளிக்கு போகிறார்களா? அவர்களுக்கு இலவச சீருடை வழங்கப்படுகிறதா?

குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித்தாய்மாரின் போசாக்கினை உயர்த்துவதற்கான திட்டங்கள் ஏதேனும் நடைமுறைப் படுத்தப்படுகின்றனவா? இது போன்ற விடயங்கள் குறித்து ஆளுநர் அறிவித்தல் விடுத்திருப்பாராயின் இறைவா! இந்த மண்ணில் ஆளுநரிடத்திலாவது இரக்கம் இருந்தது என கூறி ஆனந்தக் கண்ணீர் சொரிந்திருக்கலாம்.

ஆனால் அவரே மிகக் கடுப்புடன் அரச ஊழியர்கள் உடனடியாக கடமைக்கு திரும்ப வேண்டுமெனக் கூறுகிறார்.

அவரின் அறிவித்தலை இரத்துச் செய்து மீளக் குடியமர்ந்த அரச ஊழியர்களுக்கு அடுத்து வரும் இரண்டு மாதங்களுக்கு நிம்மதிக்கான விடுமுறை வழங்கினால் என்ன?

எங்கள் அரசியல் தலைமைகள் ஆளுநரிடம் பேசுவார்களா? எல்லாம் இழந்து வாழும் உள்ளங்களுக்கு ஆறுதல் பெற்றுத் தருவார்களா?

# சவுதியில் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள் குறித்து இலங்கைக்கு அறிவிக்கப்படவில்லை

## வெளிநாட்டு வேலைவாய்ப்புத் திணைக்களம்

(கொழும்பு)

கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் சவுதியில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட இலங்கையர்கள் இருவரின் விவகாரங்களும் இரகசியமான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தக் குற்றச் சாட்டுக்களுடன் சம்பந்தப்பட்ட மேலும் ஐந்து இலங்கையர்களுக்கு ஐந்து வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர்களை மீட்பதற்கு முயற்சித்த போதும் அவர்கள் கடந்த வருடமே இந்தத் தீர்ப்புக்கு உட்படுத்தப்பட்டனர். எனினும், இது தொடர்பில் தமக்கு எந்த அறிவித்தலும் வழங்கப்படவில்லையென அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மரணதண்டனை விதிக்கப்பட்ட இருவரின் சடலங்களும் இதுவரையில் தம்மிடம் கையளிக்கப்படவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட ஆண் மற்றும் பெண் குற்றவாளிகள் இருவரும் இலங்கையிலிருந்து சென்று தொழிலாற்றியவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

மரண தண்டனைக்குட்படுத்தப்பட்ட ஆண், அங்கு இந்தியர் ஒருவரைத் திருமணம் முடித்ததாகவும் அவருக்கும் இவர்களுடன் மரணதண்டனை விதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் அவர்களின் இரண்டு பிள்ளைகளையும் இலங்கைக்கு அழைத்து வந்து அவர்களின் பாதுகாவலர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் மற்றுமொரு பெண் குற்றவாளியின் பிள்ளை கள் தற்போது அவரது தாயாரின் பராமரிப்பில் வசிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குழந்தை ஒன்றை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள இலங்கையரான ரிசானா நபீஸை விடுவிப்பது தொடர்பிலும் நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

### மாகாணமட்ட ஆங்கில நாடகப் போட்டியில்

## உடுவில் மகளிர் கல்லூரிக்கு இரண்டு முதலிடங்கள்

(வட்டுக்கோட்டை)

மாகாண மட்ட ஆங்கில நாடகப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி இரண்டு முதலிடங்களை தனதாக்கிக் கொண்டது. இம்முறை மாகாண மட்டப் போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

இப்போட்டியின் கீழ்ப்பிரிவில் 'கெயிடி' எனும் ஆங்கில நாடகமும், மேல்பிரிவில் 'அஸ் யூ வைக் இற்" என்ற நாடகமும் முதலிடம் பெற்றுள்ளதுடன் மாகாண மட்ட தனிப்பிரிவுப் போட்டியின் ஆங்கில கவிதைப் போட்டியில் சி. பிரதக்சனா இரண்டாம் இடமும், ஆங்கில பேச்சுப் போட்டியில் ரா. விதுசா மூன்றாம் இடமும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-27)

## குடிதண்ணீர் திட்டத்திற்கு 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பிரிவில் வரட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டத்திற்கு சமூக சேவை திணைக்களம் 3 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் இத்திட்டம் விரைவில் பூர்த்தி செய்யப்படுமெனவும் வேலணைப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (6-72)

## தென் மாகாண சபை உறுப்பினர் முத்துஹெட்டிகம பொலிஸாரால் கைது

தென்மாகாண சபை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகம நேற்று மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தென் மாகாணத்திற்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் கிங்ஸ்லி ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த மாகாண சபைத் தேர்தலில் காலி அரசாங்க அதிபர் அசோக்க ஜயசேகரவை அச்சுறுத்தியமை தொடர்பாக நிஷாந்த முத்துஹெட்டிகமவை கைது செய்யுமாறு நீதி மன்றம் உத்தரவிட்டதை தொடர்ந்து, விசேட பொலிஸ் குழுவொன்றினால் அவர் யக்கலமுல்லை பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

அதேவேளை தென்மாகாண சபையின் பிரதி செயலாளர் எஸ்.எம்.பி.கே.பெரேராவை முத்துஹெட்டிகம அச்சுறுத்தியதாகவும் காலி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தென் மாகாணத்தில் உள்ள ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான நிஷாந்த முத்துஹெட்டிகமவிற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் அண்மைகாலமாக ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணமாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அத்துடன் அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து கொள்ள உள்ளதாக தகவல் வெளியாகிய நிலையில், முத்துஹெட்டிகம கைது செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் 4 இற்கான பரீட்சை

மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் தரம் 4 இற்கான பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இப்பரீட்சையின் விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 30 ஆம் திகதி ஆகும்.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் யாழ். ரில்கோ ஹோட்டலில் அமைந்துள்ள யாழ். மாவட்ட மெய் வல்லுநர் சங்கத்தினருடனோ அல்லது யாழ். மாவட்ட மெய்வல்லுநர் தொழில் நுட்ப அலுவலர் சங்கத்தினருடனோ தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ள முடியுமென மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் சங்கத் தலைவர் த. சிவசோதி அறிவித்துள்ளார். (ஓ-9)

## பொதுக்கூட்டம்

(தனங்கிளப்பு)

தனங்கிளப்பு மணற்காட்டு கந்தசாமி ஆலயத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி 9 மணிக்கு மறவன்புலோ கிராம சேவையர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் உறுப்புரிமை பெற்ற அனைவரையும் கலந்து கொள்ளும்படி ஆலயத்தின் உபதலைவர் இ. சட்டநாதர் அறிவித்துள்ளார். இக்கூட்டம் 10 வருடத்திற்குப் பின்னர் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-37)

## சுகாதார சேவைகள் பணிமனையின் இணையத்தளம் ஆரம்பித்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் இணையத்தளம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கப்பட்டது. இவ்வைபவத்திற்கு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதிமாகாணப்பணிப்பாளர் (நிர்வாகம்), கணக்காளர், வடமாகாண சுகாதார அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர் மற்றும் உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர். இவ் இணையத்தளத்தினை யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கடமையாற்றும் சு.பாஸ்கரலிங்கம் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் வடிவமைத்தார்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் WWW.jaffnahealth.org என்ற இணையத்தள முகவரியூடாக யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் தொடர்பான செய்திகள், வைத்தியசாலைகளின் சேவை விபரம், ஆளணிவிபரம். அபிவிருத்திப்பணிகள், தொற்று நோய்கள் தொடர்பான மேலும் பல விபரங்களினை இதில் பார்வையிடலாம்.

இத்தினத்தில் காலை 9.00 மணி தொடக்கம் வடமாகாண சுகாதார அமைச்சினால் யாழ்.மாவட்ட சுகாதார பணியாளர்களுக்கான குறைகேள் நடமாடும் செயலகமும் நடத்தப்பட்டது. இதில் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் நலன்புரி முகாம்களில் இருந்து வந்த வன்னி பிரதேச சுகாதாரசேவைப் பணியாளர்களின் பிரச்சினைகளும் ஆராயப்பட்டன. (ச)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



ஏன்? எதற்கு? என்ற ஆராய்ச்சிகளில் ஈடுபடுவது நமது வேலையன்று. மாறாக, செயலில் ஈடுபட்டுச் செத்து மடிவது ஒன்றுதான் நமது கடன். மகத்தான காரியங்களைச் செய்வதற்காக ஆண்டவன் நம்மைத் தேர்ந்தெடுத்திருக்கிறான் என்றும் அவற்றை நாம் செய்து முடிப்போம் என்றும் உறுதியாக நம்பு. துரதிருஷ்டவசமாக இந்த வாழ்க்கையில் மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள் எந்த விதமான ஓர் உயர்ந்த இலட்சியமும் இல்லாமல் இருளடைந்த இந்த வாழ்க்கையில் தட்டுத் தடுமாறிச் சென்று கொண்டிருக்கின்றார்கள்.




அச்சுவேலி மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.
இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ். தேவானந்தா, யாழ்.வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் மற்றும் விருந்தினர்கள் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன்அழைத்துவரப்படுவதையும், யாழ். வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்கு வதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: கோப்பாய் நிருபர்)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்தவர்களின் பிறப்பு, இறப்பு பதிவுகள்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி,முல்லைத்தீவுமாவட்டங்களைச் சேர்ந்தவர் களின் பிறப்பு, இறப்புப் பதிவுகள் வவுனியா மாவட்டத்தில் தற்காலிகமாக நிறுவப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டச் செயலகங்களில் மேற்கொள் ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் இருந்து தற்போது யாழ். மாவட்டத்தில் மீள் குடியமர்த்தப் பட்டவர்கள் தமது பிறப்பு, இறப்புப் பதிவுகளை வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகத்தினாலோ மேலதிக மாவட்டப் பதிவாளர் நாயகத்தினூடாக வோ மேற்கொள்ள முடியும் என தெரி விக்கப்படுகின்றது. (ஓ-7)

# தரவட்ட அமர்வு

(யாழ்ப்பாணம்)

கல்வியில் மெய்ம்மை நோக்கிய அதிபர் வட்டத்தின் 6ஆவது தரவட்ட அமர்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக உளவியல்துறை வருகை விரிவுரையாளர் வண.பிதா ரஜேந்திரம் ஸ்டாலின் கருத்துரை வழங்கவுள்ளதுடன் அதிபர் வே. பாலசுப்பிர மணியம் அனுபவப்பகிர்வினை பகிர்ந்து கொள்ளவுள்ளார். (6-4)

# யாழ். மாநகரசபையின் இரண்டாவது அமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் இரண்டாவது அமர்வு மாநகர சபை முதல்வர் திருமதி பற்குணராசா யோகேஸ்வரி தலைமை யில் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணி க்கு மாநகர சபை சபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-7)

# மூக்குக் கண்ணாடி விநியோகமும் இலவச கண் பரிசோதனையும்

(யாழ்ப்பாணம்)

செனல் அய் ஒப்டிகல் நிறுவனத்தினால் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமைமுற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 5மணிவரை சமூக சேவை அடிப்படை யில் மூக்குக் கண்ணாடி விநியோகம் இடம்பெறவுள்ளதுடன் இலவச கண்பரிசோதனையும் நடைபெறவுள்ளது.

இதில் அதிசிறந்த வைத்தியர்கள் மூலம் நடத்தப்படவுள்ள இச் சேவையில் கோல்ட் பிரேம் கொண்ட வாசிப்புக் கண் ணாடியை ரூபா 350 க்கும், கோல்ட் பிரேம் அமைப்பில் தூரப் பார்வை, கிட்டப் பார்வைக் கண்ணா டியை ரூபா 350க்கும், கோல்ட் பிரேம் அமைப்பில் தூரப் பார்வை, கிட்டப் பார்வைக் கண்ணாடியை ரூபா 650க்கும் பெற்றுக் கொள்ள முடியும் என தெரி விக்கப்படு கிறது. (ஓ-4-72)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் ஐந்து வலயங்களிலும் உள்ள பாடசாலைகளிலும் க.பொ.த. உயர்தரத்தில் பரதநாட்டியம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் தொடர்ந்து 5 நாட்கள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படவுள்ளது.

எனவே சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழகியல்துறை உதவி செயற்திட்ட அதிகாரி என். திருக்குமரன் தெரிவித்துள்ளார். (6-7)

# அமெரிக்க இராணுவ முகாமில் துப்பாக்கிச்சூடு சகவீரர் வெறியாட்டத்தில் 12 பேர் பலி

(டெக்சாஸ்)

அமெரிக்க இராணுவ வீரர் முகாமில் சக வீரர் துப்பாக்கி சூடு நடத்தியதில் 12 வீரர்கள் பலியாயினர். 30பேர் காயமுற்றனர் இந்த வெறியாட்டத்தில் ஈடுபட்ட வீரர் ஈராக் பாதுகாப் புப் பணிக்காக செல்லத் தயாராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவில் டெக்சாசில் கில்லின் அருகே போர்ட் ஹூட் என்ற இராணுவ முகாம் உள்ளது. இங்கு வீரர்கள் வழக்கம் போல் தங்களது பயிற்சி யில் ஈடுபட்டிருந்தனர்.இந் நேரத்தில் வந்த சக வீரர் ஒருவர் அங்கிருந்த வீரர்களை நோக்கி பட, படவென சுட்டார்.

இதில் சம்பவ இடத்தி லேயே 11 பேர் இறந்தனர். 30 பேர் காயமுற் றனர். ஒருவர் ஆஸ்பத்திரி கொண்டு செல் லும் வழியில் இறந்தார். இச்சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள் ளது.

இச்சம்பவம் குறித்து லெப்டினன்ட் ஜெனரல் ராபர்ட் பாப்கோன் நிருபர்களிடம் பேசுகையில், இச்சம்பவத்தில் ஈடுபட்டவர் அங்குள்ள இராணுவ வீரர் மேஜர் நைடால் மாலிக் ஹசன் (39). இவர் கையில் இரண்டு துப்பாக்கியுடன் வந்து சுட்டதாகத் தெரிகிறது. அவர் தற்போது பாதுகாப்பில் வைக்கப்பட் டுள்ளார். இவரோடு மேலும் இரண்டு பேர் சேர்ந்திருந்ததாக முதற்கட்ட விசாரணையில் சந்தேகிக்கப்படுகிறது. இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் காரணம் குறித்து இன்னும் தெரிய வில்லை. விசாரிக்கப்பட்டு வருகிறது.இதில் ஒரு பொலிஸ்காரரும் 11 இராணுவ வீரர்களும் இறந்துள்ளனர்.

இக் கொடூர சம்பவத்தில் ஈடுபட்ட நைடால் ஈராக்கில் பாகாப்புப் பணிக்கு செல்லும் பட்டி யலில் இடம்பெற்றிருந்தார். இன்னும் சில நாட்களில் ஈராக் செல்லவேண்டிய அவர் சக வீரர்களை சுட்டுக் கொன்றது அமெரிக்கா வில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஓ-6)

## முன்னாள் செர்பிய பொஸ்னியத் தலைவர்

# ரேடோவான் கராடிச்சுக்கு வலுக்கட்டாயமாக ஒரு சட்டத்தரணியைத்தர நீதிமன்றம் முடிவு

திஹேக்கில் செயற்பட்டு வரும் ஐக்கிய நாடுகள் சபையின் போர் குற்றங்கள் தொடர் பான தீர்ப்பாயத்தில் விசாரணையை எதிர் கொண்டு வரும் முன்னாள் செர்பிய பொஸ் னியத் தலைவரான ரேடோவான் கராடிச் அவர் களுக்கு வலுக்கட்டாயமாக ஒரு சட்டத்தரணி யைத் தர முடிபுசெய்துள்ளதாக அதன் நீதி பதிகள் கூறியுள்ளனர்.

இதுவரை தனக்கு எதிரான வழக்கில் தானே ஆஜராக வேண்டும் என்று கராடிச் வலி யுறுத்தி வந்தார். ஆனால் தனக்கு வழக்கை எதிர்கொள்ள மிகக் குறுகிய கால அவகாசமே இருந்தது என்று கூறி வழக்கில் ஆஜராவதை அவர் புறக்கணித்து வந்தார்.

கடந்த மாதம் தொடங்கிய இந்த வழக்கு விசாரணையை புதிய சட்டத்தரணி தம்மை தயார் செய்து கொள்ளும் முகமாக அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை நீதிபதிகள் தள்ளி வைத்தனர்.

பொஸ்னியப் போரில் இனப்படுகொலை மற்றும் மனித குலத்துக்கு எதிராக குற்றமி ழைத்ததாக தம் மீது கூறப்படும் குற்றச்சாட் டினை ரடோவான் கராடிச் மறுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## இமாச்சல பிரதேச

# மலையில் பஸ் உருண்டு 22 பேர் பலி

(சிம்லா)

இமாச்சல பிரதேசம் மாநிலம் கங்கரா மாவட்டத்தில் மலை பாறையில் சென்ற பஸ் உருண்டு தண்ணீர் குட்டையில் விழுந்துள் ளது. இதில் 22 பயணிகள் உயிரிழந்தனர். 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.(ஓ-6)

# உட்சந்தை மோசடி தொடர்பில் மேலும் 14 பேர் கைது

## அமெரிக்க புலனாய்வுத்துறை தெரிவிப்பு

ராஜ் ராஜரட்ணத்தின் உட்சந்தை மோசடி தொடர்பில் மேலும் 14 பேர் மீது அமெரிக்க புலனாய்வுத் துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.இதற்கிடையில், இது தொடர் பில் ராஜ்ராஜரட்ணத்தின் மீது 13 குற்றச்சாட் டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

பங்குச்சந்தை தகவல்களை வழங்கி யதனூடாக உட்சந்தை மோசடியில் ஈடுபட்டு தமது பங்குக்கு 25 மில்லியன் டொலர்களை இலாபமாக ஈட்டியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதனை அமெரிக்க பாதுகாப்பு மற்றும் பங்குபரிவர்த்தனை ஆணையாளர் தெரிவித் துள்ளார்.

இந்தநிலையில் அமெரிக்க புலனாய்வுத் துறையினர் நேற்றுமுன்தினம் மேலும் 8 பேரை உட்சந்தை மோசடி தொடர்பில் கைது செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின் றன.

தற்போது இந்த வழக்கு மீதான விசார ணைகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ள னர். (ஓ-6)

# அமெரிக்காவில் பன்றிக்காய்ச்சல் மனிதரிடமிருந்து பூனைக்கு பரவியது

பன்றிக் காய்ச்சல் நோய் உலகம் முழுவ தும் பரவி படாத பாடு படுத்தி வருகிறது. அமெரிக் காவில் தான் பன்றிக்காய்ச்சல் நோய்த் தாக்கம் அதிகமாவுள்ளது. இதுவரை மனிதர்க ளிடம் இருந்து மனிதர்களுக்கு மட்டுமே பன்றிக்காய்ச்சல் பரவுவதாக கருதப்பட்டது.

ஆனால் அமெரிக்காவில் மனிதர்களிடமி ருந்து பூனைக்கு பன்றிக் காய்ச்சல் பரவியி ருப்பது தெரிய வந்துள்ளது.

ஐவோ மாநிலத்தில் பன்றிக் காச்சலால் ஒரு குடும்பத்தில் மூன்று பேர் பாதிக்கப்பட்டிருந் தனர். அவர்கள் குணமடைந்த நிலையில் அவர்களது செல்ல வளர்ப்பு பூனைக்கு காய்ச் சல் ஏற்பட்டது. அங்குள்ள கால்நடை மருத்து வமனையில் அந்தப் பூனையிடம் ஐந்து நாள் சோதனை நடத்தப்பட்டது.

அப்போது அந்தப் பூனைக்கு பன்றிக் காய்ச்சல் பரவியிருப்பது உறுதிசெய்யப்பட் டது. இதனால் ஒரு பூனையிடம் இருந்து மற்றொரு பூனைக்கு பன்றிக்காய்ச்சல் பரவ வாய்ப்பிருப்பதாக மருத்துவ நிபுணர்கள் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர். (ஓ-6)

# தமிழருக்காக குரல் கொடுக்காவிட்டால் நாடாளுமன்றம் வந்ததில் அர்த்தமில்லை

## மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

**கூட்டுப்படைகளின் தலைமை பிரதானியான ஜெனரல் சரத் பொன்சேகாவின் பிரதிநிதி என்னை சந்தித்துப் பேசினார். இரண்டு தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற இந்தப் பேச்சுக்களில் தமிழ்மக்களின் நிலைப்பாடுகள் தொடர்பில் கருத்துக்கள் பரிமாற்றப்பட்டன. இவரது பிரதிநிதி என்னுடன் சந்திப்பை ஏற்படுத்துகிறார் என்றால் தமிழ் மக்கள் தொடர்பில் ஏதோவொன்றை முன் வைக்கப் போகிறார் என்பதே அர்த்தமாகும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.**

ஐக்கிய தேசிய முன்னணியின் முதலாவது செய்தியாளர் மாநாடு நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெற்றபோதே ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தலைமையில் நடைபெற்ற இந்த செய்தியாளர் மாநாட்டில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சி..சு.க.மக்கள் பிரிவின் ஏற்பாட்டாளர் மங்கள சமரவீர உள்ளிட்ட ஏனைய தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இங்கு மனோகணேசன் மேலும் கூறுகையில் ஜெனரல் சரத்பொன்சேகாவுடனோ அல்லது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனோ எனக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை. அத்துடன் அவர்களை நான் எதிரிகளாகவும் பார்க்கவில்லை. தமிழ் மக்களின் பிரதிநிதி என்ற வகையிலேயே நான் குரல் கொடுத்து வருகிறேன்.

இந்நாட்டில் தமிழர் ஒருவர் ஜனாதிபதியாக வரமுடியாது. அதற்காக ஜனாதிபதியாவ தற்கு தமிழர் பொருத்தம் இல்லை என்று அர்த் தப்படுத்த முடியாது.

எமக்கு இருக்கின்ற வாக்கு வீதத்தின் அடிப்படையில் அது சாத்தியமற்றது. இருப்பினும் தமிழ் மக்களின் பால் எமது கட்சி கொண்டிருக்கும் நிலைப்பாட்டில் மாற் றத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியாது.

தமிழருக்காக தமிழரான நான் குரல் கொடுக்காவிட்டால் தமிழ் மக்கள் என்னை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியதில் அர்த்தமில் லை ஆனால் இன்று அரசின் அற்ப சுகத்துக்காக தமிழ் உறுப்பினர்கள் அரசுக்குள் ஒட்டிக் கொண்டு குரல்கொடுக்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

இந்நிலையில் தான் தற்போது ஜெனரல் சரத் பொன்சேகா தொடர்பிலான பிரச்சினைகள் எழுந்துள்ளன. சரத் பொன் சேகா யுத்தத்தின் போது பிரதான பங்கு வகித்தவர் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனாலும் மக்களை மீட்பதற்காக மனிதாபிமானப் பணிகள் மேற்கொண்டதாக அவர் கூறினால் மீட்கப்பட்ட மக்களை ஏன் இதுவரையில் முகாம்கள் என்ற சிறைகளுக்குள் அடைத்து வைத்திருக்க வேண்டும் என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்க வேண்டியுள்ளது.

அதேபோல் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட ஒட்டு மொத்த தமிழ் மக்கள் தமிழ் பேசும் மக்கள் மீதான அவரது நிலைப்பாடு என்னவென்பதையும் அவர் வெளிப்படுத்த வேண்டும் என்பது ஜனநாயக மக்கள் முன்னணியின் நிலைப்பாடாகும்.

நாட்டில் உச்சம் பெற்றுள்ள பிரச்சினை தான் நிறைவேற்று அதிகாரத்தை இல்லா தொழிப்பது ஆகும். இதில் எமது ஐக்கிய தேசிய முன்னணியும் அதேபோல் ஜே.வி.பியும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளன.

அத்துடன் நாட்டில் இடம்பெற்று வருகின்ற ஊழல் மோசடிகளை முறியடிப்பது முகாம்களில் உள்ள தமிழ்மக்கள் மற்றும் நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மை மக்களின் உரிமை கள் தீர்வுகள் தொடர்பில் ஜெனரல் சரத் பொன்சேகா தமது பக்க நியாயப்பாடுகளை பகிரங்கப்படுத்த வேண்டும் என்பதையும் அவரது பிரதிநிதியூடாக அறிவித்திருக்கிறேன்.

மேலும் ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து கொண்டதன் மூலம் தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வு அரசியல் அதிகாரம் சாத்தியமாகும் என்பதில் நம்பிக்கை இருக்கின்றது. எனவே வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து தமிழ் மக்களும் ஐக்கியதேசிய முன்னணிக்கு வாக்களித்து ஆதரவளிக்கத் தயாராக இருக்கின்றனர். அரசுக்கு வேண்டுமானால் வடக்கிலும் கிழக்கிலும் மாஸ்ரர்களும், கேணல்களும், கொமாண்டோக்களும் ஆதரவாக இருக்க லாம். ஆனால் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இப்பகுதிகளின் பொது மக்கள் இருக் கின் றனர் என்பதே உண்மை. ஐக்கிய தேசிய முன்னணியை வெற்றி பெறச் செய்வதற்கும் ஆட்சியை உறுதிப்படுத் துவதற்கும் நாம் பாடுபடுவோம் என்றார். (ச-5)

# ஐ.பி.எல். தொடரில் பங்கேற்க பாகிஸ்தான் வீரர்களுக்கு அனுமதி

(கராச்சி)

ஐ.பி.எல் இருபது-20 தொடரில் பங்கேற்பதற்கு பாகிஸ்தான் வீரர்களுக்கு அந்நாட்டு கிரிக்கெட் சபை அனுமதி அளித்துள்ளது.

இந்தியன் பிரிமியர் லீக்(ஐ.பி.எல்) சார்பில் மூன்றாவது இருபது-20 தொடர் அடுத்த ஆண்டு மார்ச் 12ஆம் திகதி முதல் ஏப்ரல் 25ஆம் திகதி வரை இந்தியாவில் நடக்கிறது. இந்த ஆண்டு நடந்த இரண்டாவது ஐ.பி.எல் தொடர் மும்பை பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து தென்ஆபிரிக்காவில் நடத்தப்பட்டது.

இத்தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்க அனுமதி அளிக்கப்படவில்லை. தவிர இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் எவ்வித தொடருக்கும் ஒப்பந்தம் செய்யப்படவில்லை.

இது குறித்து இந்திய கிரிக்கெட் சபையுடன் (பி.சி.சி.ஐ) பேச்சுவார்த்தை நடத்த பி.சி.சி தலைவர் இசாஜ் பட் சமீபத்தில் இந்தியா வந்தார். இப்பயணத்தின் போது இசாஜ் பட் ஐ.பி.எல் தலைவர் லலித் மோடியை சந்தித்தார்.

இது குறித்து இசாஜ் பட் கூறியதாவது, ஐ.பி.எல் தலைவர் லலித் மோடியிடம் அடுத்த ஆண்டு நடக்கவுள்ள மூன்றாவது ஐ.பி.எல் தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்க அனுமதி அளிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

இத்தொடரில் பங்கேற்க வீரர்கள் மிகுந்த ஆர்வமுடன் காத்திருக்கின்றனர். எனவே முன்னதாக ஒப்பந்தம் செய்யப்பட்ட வீரர்களை யாவது இத்தொடரில் பங்கேற்க அனுமதிக்க வலியுறுத்தி உள்ளேன். இதற்கான அனுமதியை விரைவில் உறுதிப்படுத்துமாறு மோடியிடம் தெரிவித்துள்ளேன்.

எனவே அடுத்த ஆண்டு நடக்கும் தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்பார்கள் என நம்புகிறேன். இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் பொதுவான இடத்தில் தொடரை நடத்துவது குறித்து பி.சி.சி.ஐ நிர்வாகிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன். விரைவில் இவ்விரு அணிகள் பங்கேற் கும் போட்டியை ரசிகர்கள் காண்பார்கள் என எதிர்பார்க்கிறேன்.

இது குறித்து அடுத்தகட்ட பேச்சுவார்த்தை விரைவில் நடத்தப்படும் என நம்புகிறேன். இவ்வாறு இசாஜ் பட் கூறினார்.

# சாதனை படைத்தாலும் அணி தோற்றது வேதனை

## டெண்டுல்கர் உருக்கம்



(ஐதராபாதி)

நான் ாதனை படைத்தாலும் இந்திய அணி தோ்வியடைந்தமை வேதனையைத் தருவதாக ட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்க தெரிவித்தார்.

இந்திய-வுஸ்திரேலிய அணிக்கிடையில் ஐதராபாத்தில் நடந்த 5ஆவது ஒரு நாள் போட்டியில் 17 ஆயிரம் ஓட்டங்களை கடந்து சாதனை படைத்ததுடன் 45ஆவது சதம் அடித்து சாதனை படைத்த டெண்டுல்கர் கூறியதாவது,

எனது சாதனைகளை நாட்டுக்காக அர்ப்பணிக்கிறேன் கடந்த 20 ஆண்டுகளாக நாட்டுக்காக விளையாடிவருவதை எனக்கு அளித்த பெரிய கௌரவமாக கருதுகிறேன்.

நாட்டுக்காக ஆடவேண்டும் என்பது எனது கனவாக இருந்தது. அது நிறை வேறியதுடன் என்னை எல்லாக்காலங்களிலும் உற்சாகப் படுத்தியிருக்கிறார்கள். இது எனக்கு அளவு கடந்த மகிழ்ச்சியை தருகிறது.

இந்தப் போட்டியில் ஆரம்பம் நன்றாக இருந்தது. ரெய்னா என்னோடு சேர்ந்து நன்றாக ஆடினார். நாங்கள் நல்ல ஜோடியாக இருந்தோம். ஆனால் சிலமுக்கிய விக்கெட்டுக்களை இழந்துவிட்டதால் தோல்வி ஏற்பட்டு விட்டது. இது எனக்கு வேதனை அளிக்கிறது.

ரெய்னா மிகச்சிறந்த வீரர். நாங்கள்ஆட்டத்தை வெற்றி முனைக்கு கொண்டுவந்தோம்.

அவுஸ்திரேலியா குவித்த அதிகபட்ச ஓட்டங்களை சேஸ் செய்து முன்னேறினோம். எங்களுக்கு கடும் நெருக்கடி இருந்தது. ஆனாலும் அதைபற்றி நினைக்காமல் ஆட்டத்தை நல்லமுறையில் கொண்டுவந்தோம் ஆனாலும் தோல்வி ஏற்பட்டுவிட்டது. இவ்வாறு டெண்டுல்கர் கூறினார்.

## இந்தியாவில் இன்னொரு சச்சின்

# 439 ஓட்டங்கள் குவித்து மும்பை மாணவன் சாதனை

(மும்பை)

இந்தியாவின் இன்னொரு சச்சினாக உருவெடுத்துள்ளார் மும்பையைச் சேர்ந்த 12 வயது மாணவர் சர்பராஸ்கான்.

பாடசாலை அளவிலான கிரிக்கெட் போட்டியில் 439 ஓட்டங்கள் விளாசி புதிய சாதனை படைத்துள்ளார்.

மும்பையில் பாடசாலைகளுக்கிடையிலான மிக பழைமையான ஹரிஸ் ஷீல்ட்3 நாள் கிரிக்கெட் போட்டி (16 வயதுக்குட்பட்டோருக்கான) நடந்தது. இதில் இந்தியன் எஜூகேஷன் சொசைட்டி, ஸ்பிரிங்பீல்ட் ரிஸ்வி பாடசாலை அணிகள் மோதின.

ஸ்பிரிங்பீல்ட் அணி சார்பில் சர்பராஸ்கான் 2நாட்கள் தாக்குப்பிடித்து அருமையாக ஆடினார். மொத்தம் 421 பந்துகளை சந்தித்த இவர் 56 பவுண்டரிகள், 12 சிக்ஸர்களுடன் 439 ஓட்டங்கள் விளாசினார். இதன் மூலம் இத்தொடரின் 113 ஆண்டு கால வரலாற்றில் அதிகபட்ச ஓட்டங்களை பதிவுசெய்தார். இதற்கு முன் ரமேஷ் நாக்தேவ் அதிகபட்சமாக 427 ஓட்டங்கள் (1963-64)எடுத்திருந்தார்.


### சச்சின் சாதனை

கடந்த 1988 இல் இதே ஹரிஸ் ஷீல்ட் தொடரில் தான் சிரத்தாஸ்ரமம் பாடசாலைக்காக விளையாடிய சச்சின் (329), வினோத் காம்ப்ளி (349) சேர்ந்து 664 ஓட்டங்கள் சேர்த்துச் சாதித்தனர்.

தற்போது ஆறாவது படிக்கும் சர்பராஸ் கான் 439 ஓட்டங்கள் குவித்து ஜுனியர் சச்சினாக தன்னை அடையாளம் காட்டியுள்ளார்.

### லாரா 501

சர்வதேச அளவில் முதல் தர போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் ஜாம்பவான் லாரா வார்விஷயர் அணிக்காக அதிகபட்சமாக 501 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.




இந்தியாவில் உள்ளூர் போட்டியில் பாவசாகேப் நிம்பள்கர் (மகாராஷ்டிரா) அதிக பட்சமாக 443 ஓட்டங்கள் (எதிர் கத்தியாவர் அணி 1948 -49 ரஞ்சி தொடர்) எடுத்துள்ளார்.

தற்போது ஹரிஸ் ஷெபீல்ட் தொடரில் சர்பராஸ் கான் (ரிஸ்விஸ் பிரிங் பீல்டு) 439 ஓட்டங்கள் எடுத்து சாதித்துள்ளார்.

இது குறித்து சர்பராஸ் கூறுகையில்,

நான் இலக்குகளை நிர்ணயித்து விளையாடுவேன். 300 ஓட்டங்கள் எட்டியதும் சச்சினின் பாடசாலைச் சாதனையை தகர்க்க விரும்பினேன். இறுதியில் 439 ஓட்டங்கள் எடுத்துச் சாதித்தேன்.

ஐ.பி.எல் தொடரின் போது சச்சினை அருகில் பார்த்தேன். அப்போது பங்களாதேஷ் வீரர் அஷ்ரபுல்லுக்கு துடுப்பாட்ட டிப்ஸ வழங்கினார். பந்து வீச்சாளர் கையில இருந்து பநது வருவதை நன்கு பார்த்தால் தான் எளிதாக அடித்து விளையாட முடியும் என கூறினார். இதனை நானும்பின்பற்றிரன்மழைடொழிந்தேன்.என்றார்.

## நாடு திரும்பிய சரத்...

சேகா நேற்று முன்தினம் அதிகாலை நாடு திரும்பிய பின்னர் இவ்வாறான சந்திப்பொன்று அன்று மாலைக்குள் நடைபெறும் என எதிர் பார்க்கப்பட்டது. எனினும் அந்தச் சந்திப்பு இடம்பெறவில்லை.

இதிலிருந்து இன்னமும் இந்த இரண்டு தரப்புக்குமிடையிலான முறுகல் நிலை தணியவில்லை என்றே பாதுகாப்புத் தரப்புக் கருதுகின்றது.

அமெரிக்காவில் கோத்தபாயவுக்கு எதிராக யுத்த மீறல் விசாரணையில் சாட்சியாக சமுகமளிக்க அழைக்கப்பட்டிருந்தபோதே சரத் பொன்சேகா அதனைக் கைவிட்டு நாடு திரும்பினார்.

எனினும் இதனை ஐக்கிய தேசியக் கட்சி மாற்றுக் கோணத்தில் பார்க்கின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, கோத்தபாய ராஜபக்ஷவைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே அரசாங்கம் சரத் பொன் சேகாவை முனைப்புடன் இலங்கைக்கு அழைத்ததாகத் தெரிவித்துள்ளார். (ச-5)

## கண்ணிவெடி அகற்ற இயந்திரங்கள் கையளிப்பு

(கொழும்பு)

வன்னியில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை துரிதப்படுத்துவதற்காக கண்ணிவெடிகளை அகற்றும் 5 இயந்திரங்களை இலங்கைக்கு வழங்கவுள்ளதாக யு.என்.ஏச். சி.ஆர் எனப்படும் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது. (ச-14)

## பாதுகாப்புச் செயலாளர்...

கேட்காது தன்னால் எதனையும் கூற முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குறித்து அறிவது அமெரிக்க அதிகாரிகளின் நோக்கம். எனினும் அவர்களின் கோரிக்கையைத் தான் நிராகரித்ததாகப் பொன்சேகா கூறியுள்ளார்.

அமெரிக்க அதிகாரிகள் விசாரணை நடத்துவது குறித்து எழுத்து மூலமான கோரிக்கையை விடுத்திருந்தனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்துள்ள சரத் பொன்சேகா, அரசியலில் ஈடுபட இந்த நாட்டிலுள்ள எவருக்கும் உரிமையுள்ளது. அது குறித்துக் கேள்வி எழுப்ப எவருக்கும் உரிமையில்லை எனவும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க உள்துறைப் பாதுகாப்புத் திணைக்களம் கடந்த 4 ஆம் திகதி பொன்சேகாவிடம் விசாரணை நடத்தவிருந்த போதிலும் அரசாங்கத்தின் அழுத்தம் காரணமாக அதனைக் கைவிட்டுள்ளது.

அரசாங்கம் பொன்சேகாவை இலங்கைக்கு வருமாறு அறிவித்ததையடுத்து அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய, பொன்சேகாவை டலஸ் விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்று அவர் இலங்கைக்குச் செல்ல உதவியுள்ளார். (ச-5)

## கிளி.மாவட்ட...

களுக்குக் கண்ணி வெடிகள் பற்றிய விழிப்புணர்வு அறிவூட்டப்பட்டதன் பின்னர் அவர்கள் உடனடியாகவே அவர்களது சொந்தக் காணிகளில் குடியமர்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேசத்தில் 3 ஆயிரம் பேர் வரை மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-14)

## ஐரோ.ஒன்றியத்தின் அறிக்கை...

வினால் கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் இந்த அறிக்கையை ஒப்படைத்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளது வெளிவிவகார அமைச்சர்களுக்குத் தனித்தனியாக முகவரியிடப்பட்டு இந்தப் பதில் அறிக்கையின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த பதில் அறிக்கையின் மூலம் இலங்கைக்குச் சலுகைத் திட்டம் கிடைக்கக் கூடிய சாத்தியம் இருப்பதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரத் தகவல்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

இதேவேளை ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டத்தை இலங்கைக்கு வழங்குவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என சர்வதேச வர்த்தக மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டத்தை வழங்குவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பல்வேறு பிழைகளும் பொருத்தமற்ற தகவல்களும் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் கருத்துக்களை நேற்று வரையில் ஏற்றுக் கொள்ளத் தயாரென ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## காங்கேசன்...

கொள்வதோடு,

கப்பல், விமானம் மூலம் யாழ்.மாவட்டத்திற்கு பயணத்தை மேற்கொள்பவர்கள் அவ்வழியினூடாக யாழ்.மாவட்டத்திலிருந்து பிரயாணங்களை மேற்கொள்ள முடியும் என அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

## 78 மேலதிக...

நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பின்போது சமுகந்தந்திருக்கவில்லை. (ச-3,5,17)

## அத்தியாவ...

தெரிவித்தார்.

110 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ சீனி ரூபாய் 89.50க்கும் 230 ரூபாய்க்கு விற்கப்பட்ட தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் 149 ரூபாய் வரையிலும் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இவற்றை லக், சதொச விற்பனை நிலையங்களூடாக விநியோகிப்பதாகவும் நுகர்வோர் விவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-3,14)

## பொன்சேகா...

ஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் றொபேட் ஓ பிளேக்கைச் சந்திக்கவிருந்த போதிலும் பிளேக் சுகவீன முற்றியிருந்ததால் அந்தச் சந்திப்பு இடம்பெறவில்லை.

அதேவேளை சரத் பொன்சேகா உத்தியோகபூர்வ பணிகளுக்கு அப்பால் சந்திக்கும் நபர்கள் குறித்து அறிவதற்காக இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனைப்படி புலனாய்வுச் சேவை அதிகாரிகள் பலர் பணியில் அமர்த்தப்பட்டிருந்ததாகவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (ச-5)

## ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவை...

அலரி மாளிகையிலிருந்து ஜனாதிபதி செயலகத்திற்கும் ஜனாதிபதி மாளிகைக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் ஜனாதிபதி செல்லும் சந்தர்ப்பங்களில் இராணுவத் தலைமையகத்தின் ஊடாகச் செல்லும் போது இராணுவத்தின் பாதுகாப்பின் கீழ் பயணிப்பது சாதாரண நடைமுறை என்ற போதிலும் நேற்று முதல் இராணுவத் தலைமையகத்தின் ஊடாக செல்லும்போது ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளை இராணுவத் தலைமையலுவலகத்தில் நிறுத்தி வைக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளார் எனவும் கூறப்பட்டது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஜனாதிபதி கடந்த 4 ஆம் திகதி முழங்காவில் பிரதேசத்தில் 651-வது படைப் பிரிவின் தலைமையகத்திற்குச் சென்று விடுதலைப்புலிகளுக்கு எதிராக யுத்தத்தை வழிநடத்திய சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளைச் சந்தித்த சந்தர்ப்பத்தில் கூட கைக்கெட்டிய தூரத்திலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ள முயற்சித்ததாகத் தெரிய வருகின்றது.

ஜனாதிபதியை நெருங்க முடியாதவாறு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டிருந்ததுடன் வேலிகளுக்கு வெளியிருந்தே ஜனாதிபதி இராணுவத் தலைவர்களுடன் கைகுலுக்கியுள்ளார்.

அத்துடன் இந்த இராணுவ அதிகாரிகளிடையே ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகளையும் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் ஜனாதிபதியினால் அரசியல் ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட இராணுவத்தினருடன் மாத்திரமே கலந்துரையாடிப் புகைப்படம் எடுத்துக் கொண்டமையானது ஏனைய இராணுவ அதிகாரிகள் மற்றும் படையினர் மத்தியில் விமர்சனத்திற்குள்ளாக்கியுள்ளது.

**வன்னிக்கான திடீர் விஜயம்**

கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரி ஜெனரல் சரத் பொன்சேகா இலங்கை திரும்பும் முன்னர் ஜனாதிபதி, இராணுவத் தளபதியுடன் இராணுவத்தினரின் நலன்களை அறியும் நோக்கில் ஊடகங்களுடன் திடீரென வன்னிக்குச் சென்றிருந்தார்.

சரத் பொன்சேகா இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தால் படையினரின் கௌரவமும் கவனமும் அவர்பால் திரும்பியிருக்கும் என்பதை நன்குணர்ந்து கொண்ட ஜனாதிபதி, அவர் இல்லாத நிலையில் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இராணுவத் தலைமையகம் மற்றும் கொழும்பிலுள்ள முக்கிய இடங்களின் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்த சிங்க ரெஜிமென்டின் படையினர் அகற்றப்பட்டு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நேற்று முன்தினம் முதல் அவற்றின் பாதுகாப்புப் பொறுப்புகளுக்கு வேறொரு படையினரை ஈடுபடுத்துமாறு இராணுவத் தளபதி உத்தரவிட்டுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா இலங்கை திரும்பியதையடுத்தே இராணுவத் தலைமையகத்திலுள்ள சிங்கப் படைப் பிரிவைச் சேர்ந்த படையினரை அங்கிருந்து அகற்றும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமிருந்து கிடைத்த உதரவின் அடிப்படையிலேயே இந்த் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுன் இதற்குப் பொறுப்பாக மேஜர்ஜெனரல் மனோ பெரேராவே செற்பட்டுள்ளார்.

மனோ பெரேரா இராணுவத் தலைமையகம் மற்றும் கூட்டுப் படைத் தலைமையக ஆகியவற்றின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருக்கும் அதிகாரியாவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

JAFFNA CENTRAL COLLEGE
PRIZE DAY - 2009
We cordially invite you to the Prize day to be held in the TAMBER HALL on Saturday the 07th of November at 10.00 am
Chief Guest
Hon. Minister K.N.Douglas Devananda M.P.
(Ministry of Social Service and Social Welfare)
Principal,
Staff & Students.
(C-3663)

வேலை வாய்ப்பு

வேலை வாய்ப்பை நாடிநிற்கும் துடிப்பான இளைஞர் யுவதிகளுக்கு சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக யாழ்.மண்ணில் 45 வருடங்களாக தொடர்ந்து நிலைத்திருந்து சேவையாற்றிவரும் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற அரியவாய்ப்பு.

வேலை பற்றி
- ஒரு மாத பயிற்சிக் காலத்தை உடையது.
- இக்காலப் பகுதியில் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும்.
- பயிற்சி நெறியின் நிபந்தனைகள் பூர்த்தியாகும் பட்சத்தில் நிரந்தரமாக்கப்படுவீர்கள்.
- பயிற்சிக் கால முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

அடிப்படைத் தகைமை
- G.C.E.O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாட சித்தி.
- 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையை (Bio Data) 15.11.2009க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் விளம்பர இலக்கத்துக்கு அனுப்பவும்.
விளம்பர இல. C-3643
C/o, வலம்புரி
இல.03,02ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(C-3643)

வாழ்த்துகின்றோம்

விடியலுக்காய் ஏங்கி நின்றோம்– விடியவில்லை
அரசியலுக்காய் காத்து நின்று ஏங்கி போனோம்
தீர்வுக்காய் போராடி தீர்வின்றிப் போனோம்
தென் இலங்கையின் நம்பிக்கையை மறந்து போனோம்
நாம் இன்று கூட உம்மை நம்புகின்றோம்
நீ எமக்காய் தூது செல்வாய் என்று...
யாழ் தீவக வட்டுக்கோட்டை நண்பர்கள்
(3893)

அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை -2009
சித்தியடைந்த மாணவர்களுக்கான
பரிசளிப்பு நிகழ்வு
எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 07.11.2009 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இயக்குநர்.
(C-3647)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2009 இல் அச்சிட்டு வளியிடப்பட்டது.